விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை27 திங்கட்கிழமை (10.02.2003) தொலைபேசி- 2223378 ஒலி 53

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் – thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your children

## நாட்டின் இறைமையை பாதுகாக்க

# முப்படைத் தளபதிகளுக்கும் ஜனாதிபதியே உத்தரவிடுவார்

### ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் அறிவிப்பு

(நமது நிருபர்)

**தேசிய பாதுகாப்பிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் நாட்டின் இறைமைக்கும் குந்தகம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க முப்படைகளின் தளபதி என்ற முறையில் வருங்காலத்தில் உரிய பணிப்புரைகளை நேரடியாக வழங்கவுள்ளார் என்று ஜனாதி பதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த உடன படிக்கை ஏற்ட்டு ஒரு வருட காலத்தை நிறைவு செய்ய இருக்கும் காலகட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா இத்தகையதொரு நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

அரசும் விடுதலைப் புலிகளும் ஒரு வருட காலமாக யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து வரும் வேளையில் அப்போதைக்கு அப்போது சில யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெற்ற போது ஜனாதிபதி தான் நேரடியாக நடவடிக்கை எடுக்காது அரசின் மூலமோ பாதுகாப்பு அமைச்சின் மூலமோ நடவடிக்கை எடுத்து வந்துள்ளார்.

இப்படியான சந்தர்பங்களின்போது ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்புரைகளைபாதுகாப்பு அமைச்சு ஏற்று விரைந்து நடவடிக்கைகளை எடுக்கும்பட்சத்தில் நிலைமைகள் விபரீதமாகும் சந்தர்ப்பங்கள் உண்டு இதனடிப்படையில் கடந்த ஆறாம் திகதி வியாழக்கிழமை நெடுந்தீவு கடல் பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றினையடுத்து அது தொடர்பாகவிரைந்து நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும்,கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயசந்தகிரிக்கும் பணிப்புரை விடுத்திருந்தார்.

பேர்ளினில் 5வது சுற்றுப் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் போது துரதிஷ்டவசமாக இச்சம்பவம் நடை பெற்றதினால் பாதுகாப்பு அமைச்சரோ,கடற்படைத் தளபதியோ எந்தவிதமான நடவடிக்கையும்

(10ம் பக்கம் பார்க்க)



5ம் சுற்றுப் பேச்சுக்களின் பின் பத்திரிகையாளர் மாநாட்டிற்கு அமைச்சர் பீரிஸூம், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் செல்லும் காட்சி..

## வவுனியாப் பொலிஸார் கொடிகளை அகற்றினர்

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையீடு

(வவுனியா)

நெடுந்தீவுக் கடற் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கடற்புலிப் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்தமைக்கு துக்கம் அனுஷ்டிப்பதற்கு வவுனியாவில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளை பொலிஸார் அகற்றியுள்ளனர்.

வவுனியா பொலிஸாரின் இந் நடவடிக்கையை கண்டித்து புலிகளின் வவுனியர மாவட்ட அரசியல் துறையினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வவுனியா மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்த புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் வீரச்சாவடைந்த

(10ம் பக்கம் பார்க்க)

## தொழிலற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூபா2000 கொடுப்பனவு

### மார்ச்சிலிருந்து அமுல்

(கொழும்பு)

தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்தம் ரூபா2000ம் அலவன்ஸ் வழங்குவதென கடந்த தேர்தலில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி எதிர்வரும் மார்மாதத்தில் இருந்து அமுலுக்கு வரவிருக்கின்றது.

பயிற்சித் திட்டம் ஒன்றுடன் கூடிய இக் கொடுப்பனவு,மாதாந்தம் 40000 பேருக்கு ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ளது.கொடுப்பனவு 18 மாதங்களுக்கே வழங்கப்படும்.இதற்கான இளைஞாகள் வடக்குக கிழக்கு உட்பட இலங்கை முழுவதிலிருந்து தெரியப்படுவர்.இவ்வாறு கொள்கை அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.ஆர்.அமரதுங்கா தெரிவித்தார்.

18மாதகால பயிற்சியின் போது இவ்விளைஞர்களுக்கு இலவச உணவு, வதிவிடம்,சீருடைகள் என்பன வழங்கப்படும் இதற்கென அரசாங்கம் 100கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தனித் தமிழீழம் அமைவதை இந்தியா விரும்பாது

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தனித் தமிழீழம் அமைக்கப்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பமாட்டாது,என்று தனது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டு அங்கு சென்று இருந்த எதிர்க் கட்சித் தலைவர் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் மற்றும் முக்கிய அரசில் தலைவர்களைச் சந்தித்து இலங்கை அரசு நோர்வேயின் அனுசரணையுடன் மேற் கொண்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அவர்

(10ம் பக்கம் பார்க்க)

## மதில் இடிந்து விழுந்து மாணவன் பரிதாப மரணம்

### ஏழாலையில் சம்பவம்

(ஏழாலை)

விளையாட்டுப் போட்டியை பார்வையிடுவதற்காகச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் வீட்டு மதில் இடிந்து வீழ்ந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஏழாலை மேற்கு தம்புவத்தையைச் சேர்ந்த தரம் 7ல் கல்வி பயிலும் மல்லாகம் மகாவித்தியாலய மாணவனான கருணாநிதி பகீரதன்(வயது12) என்ற மாணவனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

தண்ணீர்த் தாங்கியுடன் சேர்ந்

(10ம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு குறித்து அடுத்த சுற்றில் பேச்சு

(பேர்ளின்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்றுப் பேசசுவார்த்தையில் அதிகாரப் பகிர்வு குறித்து இரு தரப்பினரும் நேரடியாகப் பேசிக் கொள்ளவுள்ளனர்.

மார்ச் மாதம் 18ம்திகதி முதல் 21ம் திகதி வரை யப்பானின் தலைநகர் டோக்கியோவில் அடுத்த சுற்று பேச்சுவார்த்தை நடை பெறும் போதே அதிகாரப் பகிர்வு குறித்து இரு தரப்பும் பேசும் எனவும் இப் பேச்சின் போது வெளி நாடுகளில் நிலவும் சமஷ்டி முறை குறித்து ஆராயப் படுமெனவும் த்கவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

## முஸ்லிம்களின் உரிமைக்கு உத்தரவாதம்

### 5ம் சுற்றுப் பேச்சில் உடன்பாடு

(பேர்ளின்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேர்ளினில் 7ம்,8ம் திகதிகளில் நடைபெற்ற 5ம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட [illegible] வரும்,அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்குக் கிழக்கில் முஸ்லிம் மக்களுககு சொந்தமான காணிகளை திருப்பி வழங்குவதற்கு புலிகள் இணங்கியுள்ளனர்.

இவ்விடயத்தை நடை முறைப் [illegible] நியமிக்கப்பட்டுள்ளது.இந்தக் குழு அடுத்த வாரம் முதல் மட்டக்களப்பில் இருந்து தனது பணியை ஆரம்பிக்கும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் விடுதலைப் புலிகளின் அரசில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் கவனத்திறகும் கொண்டுவந்துள்ளேன் என்று தெரிவித்தார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்








சுழல் பந்து வீச்சாளர்களான முரளிதரன், அனில்கும்ளே ஷேன்வோன் ஆரம்ப நிகழ்வில் கலந்துரையாடும் காட்சி

# இலங்கைக்கும் நியூசிலாந்திற்கும் இன்று பலப்பரீட்சை

உலகக்கிண்ண சுற்றுப் போட்டிகள் ஆரம்பித்த இரண்டாவது நாளான இன்று நியூசிலாந்து அணியை எதிர்த்து இலங்கை அணி மோதவுள்ளது. இலங்கை ரசிகர்களினால் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ஒரு போட்டியாக இது திகழ்கிறது.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் மிகவும் பலம் பொருந்திய அணி ஆயினும் முன்னைய தோல்விகளால் சற்று மனம் தளர்ந்துள்ளது. எனினும் துடுப்பாட்ட வரிசையில் அதிரடி நாயகன் சனத் ஜெயசூரிய, மார்வன் அத்தப்பத்து, மஹேல ஜெயவர்த்தனா, குமார் சங்ககாரா, ரசல் ஆனோல்ட், ஹசான் திலகரட்ணா போன்றோர் எந்நேரத்திலும் சிறப்பாக ஆடக் கூடியவர்கள். பந்துவீச்சில் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் மற்றும் வேகப் பந்துவீச்சாளர்களான சமிந்தவாஸ், தில்ஹார பொ்ணான்டோ ஆகியோரைக் குறிப்பிடலாம். களத்தடுப்பில் முரளிதரன், ஜெயவர்த்தனா, திலகரட்ணா ஆகியோரைக் குறிப்பிடலாம். இலங்கை அணி அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெறுமென அண்மையில் நடந்த கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணியும் சகலதுறை ஆட்டக்காரர்களை கொண்ட அணி கிறிஸ் ஹறிஸ், யாக்கோப் ஒரம், கிறிஸ் குயின்ஸ், போன்ற சகலதுறை ஆட்டக்காரர்களை குறிப்பிடலாம். துடுப்பாட்ட வரிசையில் அணித்தலைவர் ஸ்ரிபன் பிளமிங், நாதன் அஸ்ரில், மத்தியூஸ் சின்கிளேயர் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஆயினும் பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளர்ளான ஷோன் வொண்ட், ரொவ்வி போன்றோரைக் குறிப்பிடலாம். களத்தடுப்பில் கிறிஸ்ஹறிஸ் நாதன் அஸ்ரில் போன்றோரைக் குறிப்பிடலாம். யார் உலகக் கிண்ணப்போட்டியில் யார் இன்று வெற்றி பெறுவார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்.

(55)


## இன்றைய ஆட்டங்கள்

உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டியின் இரண்டாவது நாள் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் இலங்கையை எதிர்த்து நியுசிலாந்துவும் பெண்டென் மைதானத்திலும் சிம்பாவ்வேய்யை எதிர்த்து நமீபியா ஹராரே மைதானத்திலும் மோதவுள்ளன.



நேற்று ஆரம்பமான உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டியில் முதலாவது சதம் அடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் லாரா.


உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் 14 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் ஒன்றாக அமர்ந்திருக்கும் காட்சி


ஆரம்ப நிகழ்வில் இடம்பெற்ற கண்கவர் வரிக்குதிரை பொம்மைநடனக் காட்சி

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

**உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்**

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ................................
முகவரி : ................................
................................
தே.அ.அ.இல : ................................
கையெப்பம்:................................

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# உணவு, நீர் மூலம் பரவும் நோய்கள் யாழ்.மாவட்டத்தில் மிக அதிகம்

## உணவு, மருத்துவ பரிசோதனை அதிகாரி தெரிவிப்பு

(சுதுமலை)

கடந்த வருடத்தில் யாழ் மாவட்டத்தில் உணவு, நீர் மூலம் பரவும் தொற்றுநோய்கள் மிகவும் அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட உணவு மருத்துவ பரிசோதனை அதிகாரி மகாதேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் உணவு உற்பத்தி நிறுவனங்கள், பேக்கரிகள், குளிர்பான நிலைய ஊழியர்களிற்கு உணவு கையாளும் போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பான கலந்துரையாடலில் மேற்படி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் தொற்று நோய் பரவுவதில் முக்கிய தடுப்பு நடவடிக்கை உணவு கையாளும் நிலையங்களின் ஊடாகவே செய்யப்பட உள்ளதாகவும், சுகாதாரமான பாதுகாப்பான உணவு வழங்க முடியாத உணவகங்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

மேலும் குளிர்பான உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்தும் குடிநீர் கட்டாயம் கொதிக்க வைத்து ஆறிய பின்னரே அவை குளிர்பானத்திற்கு பயன்படுத்த வேண்டும் எனவும், அனேகமான குழந்தைகள், பாடசாலை மாணவர்களே இதனை பருகி வருவதாகவும் சுட்டிக்காட்டினார். இவை தயாரிக்கும் போது தயாரிப்புக்கென அமைக்கப்பட்ட சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடம் தேவை எனவும் குடியிருக்கும் வீட்டில் வைத்தோ வியாபார நிலையங்களில் வைத்தோ தயாரிக்கப்படுவது தடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எந்த உணவு தயாரிக்கும் நிறுவனமானாலும் நடப்பு வருடத்திற்கான வியாபார அனுமதி பிரதேசசபையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். சரியான முறையில் உணவு உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு சுகாதார அனுமதி வழங்கப்பட்டு அவ்வருடத்திற்கான உரிமம் வழங்கப்படும் எனவும், பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சில அத்தியாவசிய முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்பாது உணவு தயாரிக்கும் உணவு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களிற்கு சட்ட நடவடிக்கை எடுத்து மூடப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடல் அவ்வப் பகுதிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் வலமேற்கு பிரதேசசபை உயரதிகாரிகள் மற்றும் பிரதேசசபை வருமான வரி பரிசோதகர்களும் கலந்து கொண்டார்கள். (க-252)





யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற சமாதான முன்னெடுப்புக்களில் மகளிர் அபிலாஷைகளை இணைத்தல் தொடர்பான இருநாள் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்கள். படங்கள்.க.பவன்

---

## சிறுவிளம்பரம்

### 2003/2004 இராசி பலாபலன்கள்.

எங்கும் விற்பனையாகின்றது. 2003/2004 இராசிபலன்-சுபானு வருஷம் உங்களுக்கு எப்படி? மற்றும் அழகியல் தரம் 1 - 5 வரை ஆங்கிலத்தில் கட்டுரைகள், சனிமாற்றம் உங்களுக்கு எப்படி? புலமைப்பரிசில் வழிகாட்டல் பயிற்சிகள்- சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் தகவல் தடாகம் (பொதறிவு, உளச்சார்பு, மொழித்திறன்) V.A சிவராசாவின் ஆனந்தி வெளியீடுகள் என்று கேட்டுவாங்குங்கள். *(6530)*

---

## இலங்கைக்கான அமெரிக்க தூதர்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக டாக்டர் ஜெப்ரி லுண்ஸ்ரெட் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை வியாழனன்று அறிவித்துள்ளது. இவர் அமெரிக்காவின் வெளியுறவு சேவையின் சிரேஷ்ட அதிகாரியாவார். இப்பொழுது ராஜாங்கத் திணைக்கள அதிகாரியாகப்பணிபுரியும் இவர் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாட்டு விவகாரங்களுக்கான பணிப்பாளராக பணியாற்றியவராவார். பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவராவார். (க)

## மின்சாரம் தாக்கியவர் ஆஸ்பத்திரியில்

(கரணவாய்)

பயிருக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த வேளை நீர் இறைக்கும் மின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாற்றைச் சீர்செய்ய முற்பட்ட போது மின்சாரம் தாக்கியதில் உடுப்பிட்டி செல்வம் மில் ஒழுங்கை என்ற இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான த. ரவிச்சந்திரன் (வயது35) என்பவர் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-29)

## அரியாலையில் தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை சக்தி பண்ணிசை மன்றம் நடத்தும் தமிழ்விழா எதிர் வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலய முன்றலில் தலைவர் பொ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் செ. கந்தையன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(க-3)

---

## பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு முதலாம் தவணைக்குள் பயிற்சி

### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு இந்த தவணை (முதலாம் தவணை) முடிவுக்குள் பயிற்சிகள் வழங்கப்படும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன் கடந்த வருடத்தில் இருந்து நியமனம் பெறாத பகுதி நேர ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் விரைவில் அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்த அவர்,

யாழ் வலயத்தில் அவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்தார். அந்த வகையில் 80 வீதமான ஆசிரியர்களே உள்ளனர். அதிலும் 75 வீதமானவர்களே கடமை ஆற்றுகின்றனர். குறிப்பாக ஆரம்பக்கல்வி, விளையாட்டு, சித்திரம், நடனம், ஆங்கிலம் ஆகிய பாடஆசிரியர்களே பற்றாக்குறையாக உள்ளதுடன் இதனால மாணவர்கள், அதிபர்கள ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தார். (க-4)

## தொண்டர் ஆசிரியர்களின் விபரம் இவ்வார இறுதியில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்படவுள்ள ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலொன்று அடுத்த வார இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரப்பட்டியலைக் கல்விச் சேவை ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளரும், அரச பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவருமான ரி. எம். தென்னக்கோன் அடுத்த வார இறுதியில் சகல மாகாண கல்வி அமைச்சுக்களுக்கும் அனுப்பி வைக்கவுள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களைக் காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டிருந்தது.

இந்நியமனங்கள் காலதாமதம் இன்றி வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தொழிற்சங்கங்கள் ரீதியிலான போராட்டங்கள் தவிர்க்க முடியாததாகி விடும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (க-8)

## காணாமல் போனோர் விசாரணைகள் மார்ச்சில்?

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு கடந்த மாதம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த குழுவினர் மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் விஜயம் செய்யவுள்ளதாக விசாரணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், யாழ். செய்லகம், கைதடி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் மார்ச் 1,2,3ஆம் திகதிகளில் விசாரணைகள் இடம்பெறும் என்றும் முடிவுறாத விசாரணைகள் தொடர்ந்து விசாரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளன.

முன்னாள் யாழ். அரசஅதிபர் தேவநேசன் நேசையா, திருமலை அரச அதிபர் கெமிலஸ் பெர்னாண்டோ, மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் ஜெசிமாஸ்மைல் ஆகியோர் இவ்விசாரணைக்குழுவில் அங்கம் வகிப்பர் என்றும் அறியப்படுகின்றது. (க-4)

## தேயிலையின் விலையில் பெரும் வீழ்ச்சி நிர்க்கதி நிலையில் 10 இலட்சம் குடும்பங்கள்

(கொழும்பு)

தேயிலை விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளதால் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் 10 லட்சம் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையில் இலங்கை தேயிலை வெளிச்சநதையின் நாளாந்த விற்பனை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதையடுத்தே இவ்வாறு கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விலை வீழ்ச்சியை அடுத்து தேயிலைத் தோட்ட உரிமையாளர்களும், தொழிற்சாலை உரிமையாளர்களும் பெரும் நிதி நெருக்கடி நிலையை எதிர்நோக்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேயிலைக் கொழுந்துக்கு வழங்கும் முற்பணத்தைச் செலுத்த முடியாதுள்ளதாகவும் தேயிலை முதலாளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேயிலை விற்பனை வீழ்ச்சி அடைந்தாலும் உற்பத்தியைக் குறைக்க முடியாது என தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

## முன் அனுமதி பெறாமல் கட்டடம் அமைப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி பொதுமக்கள், அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரதேச சபையின் உரிய அங்கீகாரம் பெறாது முறையற்ற கட்டடம் அமைத்து வருகின்றன.

முன் அனுமதி பெறாது இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்து,சுகாதாரம், சூழல் போன்றவற்றின் பாதுகாப்புக்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது.எனவே சகல தரப்பினரும் பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் படி உரிய அனுமதி பெறாது கட்டடத்தினைக் கட்ட முற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் அறிவித்துள்ளார். (உ)

## நிலத்தடி நீரை உயர்த்தும்........

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடல் மட்டம் மிகச்சிறிய அளவில் உயர்ந்து கொண்டே வருகிறது.

ஆகவே நாம் உடனடியாகச் செயலில் இறங்கி நிலத்தடி நீர் வளத்தைக் காப்பாற்றாமல் விடுவோமானால் நீர் வளத்தை மட்டுமல்லாது நில வளத்தையும் காலப்போக்கில் இழக்க நேரிடும்.

### நிலத்தடி நீரை உயர்த்தும் வழிவகைகள்

1)ஒவ்வொருவரும் தத்தமது நிலத்தில் பொழியும் மழை நீரை வெளியே பாய்ந்தோடாமல் பார்த்துக் கொண்டால் நிலத்தடி நீர் தானாகவே மேம்பட்டுக் கொள்ளும்.

2)கிராம மட்டத்தில் மக்கள் ஒன்று கூடி ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியாக நீர் அவம் போவதைத் தடுக்கலாம்.

3)பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் இப்பணியை மேற்கொள்ள லாம். அனறேல் நீர் வழங்கல் சபை கரிசனை எடுக்கலாம்.

4)பயிர்களைப் பாதுகாப்பதற்காக விவசாய இலாகா முன்னின்று அரச உதவியுடன் இப்பணியை நிறைவேற்றினால் நீரும் நிலமும் காப்பாற்றப்படும்.

நாம் நீரைப் பேணாது விடுவோமானால் கால நீரோட்டத்தில் நீர் எம்மைப் பேணாது புறந்தள்ளி விடும

# பிரிட்டனில் அகதி அந்தஸ்து சட்டங்கள் கடும் இறுக்கம்

(லண்டன் )

பிரிட்டனில் புகலிடம் கோருவோர் தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட உள்ளன.

பிரிட்டனில் அகதிகள் அந்தஸ்தைப் பெறக் கூடிய வசதிகளைப்பயன்படுத்தி வெளி நாடுகளில் உள்ள கிரிமினல் குற்றங்களில் சந்தேகநபர் பலர் அண்மைக் காலத்தில் பிரிட்டனில் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளதை அடுத்தே பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த விடயத்தில் சட்டங்களைக் கடுமையாகத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய பாதுகாப்பான நாடுகளிற்குச் சென்றுள்ள அகதிகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் விசா இன்றி பயணம் செய்யும் ஐரோப்பியப் பேரவையின் 1959ஆம் ஆண்டு உடன்படிக்கையில் மாற்றம் செய்யப்பட்டு அவ்வாறு பிரிட்டனுக்கு வரும் அகதிகள் கடவுச் சீட்டுப் பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு விசா பெறும் நடவடிக்கை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முதல் அமுலுக்கு வரும் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பிரிட்டனில் அகதிகள் ரீதியில் புகலிடம் பெற முடியாத பிரஜைகளைக் கொண்ட நாடுகள் என்ற ரீதியில் மேலும் 7 நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அல்பேனியா,பல்கேரியா, ஜமீறா, நஷற்ஹேனியா, ருமேனியா, முன்னாள் யுகோஸ்லாவியாவின் தற்போதைய சேவியமொன்றனேகோ ஆகிய நாடுகள் பாதுகாப்பான நாடுகள் எனக் கருதப்படுவதால் அவற்றின் பிரஜைகள் பிரிட்டனில் புகலிடம் கோரி விண்ணப்பிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சைப்ஹஸ், செக்குடியரசு, எஸ்தொனியா, ஹங்கேரி,லென்பியா, லதுவேனியா, வோல்ரா,போலந்து,ஸ்லாவேகியா மற்றும் சுலோவேனியா ஆகிய நாடுகள் பாதுகாப்பான நாடுகளாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகளின் பிரஜைகள் அகதிகள் என்ற ரீதியில் பிரிட்டனில் புகலிடம் கோர முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# குளோனிங் ஆடு ஆஸ்திரேலியாவில் மரணம்

(சிட்னி)

ஆஸ்திரேலியாவில் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட முதல் ஆடு 'மடில்டா' இறந்துள்ளது.

இறந்த ஆட்டின் உடலை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அது எப்படி கொல்லப்பட்டது என்பதைக் கண்டறிய முடியவில்லை என தெற்கு ஆஸ்திரேலிய ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஆட்டை பரிசோதித்த போது ஆரோக்கியமாக இருந்தது

ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலை இறந்து கிடந்தது அதிர்ச்சியளிக்கிறது என்று ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ரொப்லெவிஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை முதல் குளோனிங் ஆடு 1996ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் உருவாக்கப்பட்டது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-3)

# சிங்கப்பு,ர் செயற்கை கோளை ஏவுகிறது ஐ.எஸ்ஆர்.ஓ.!

(புதுடில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.எஸ்.ஆர்.ஓ.) சிங்கப்பூரில் வடிவமைக்கப்படட செயற்கைக்கோளை பொலார் செயற்கைகோள் செலுத்து வாகனம்(பி.எஸ்எல்.வி) மூலம் விண்ணுக்கு அனுப்ப உள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் ஐ.எஸ்ஆர்.ஓ சார்பில் செலுத்தப்படும் 5வது வெளிநாட்டு செயற்கைக்கோள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் விண்வெளித் துறையின் ஆன்ட்ரிக்ஸ் நிறுவனமும், நன்னியாங் தொழில் நுட்ப பல்கலைக்கழகமும் இந்த செயற்கைக்கோள் அனுப்பும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருப்பதாக புதுடில்லியில் வெளியான அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

''எக்ஸ் - சேட்'' என்னும் பெயரிலான 100கிலோ எடை கொண்ட இந்த செயற்கை கோளை நன்னியாங் தொழில் நுட்ப பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ளது.

பூமி பற்றி அறியவும், படங்களை எடுத்து அனுப்புவதற்காகவும் இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நில மற்றும் கடற்கரை குறித்த தகவல்களையும் எடுத்து அனுப்புவதற்கு சிங்கப்பூர் நிறுவனம் முடிவு செய்து ஐ.எஸ்ஆர்.ஓ ஏவுகணை தளத்திலிருந்து அனுப்புவதற்கு ஒப்பந்தம் கையளித்தாகி இருப்பதாக ஏற்கனவே பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் கொரியா நாட்டு செயற்கைக்கோள்கள் ஐ.எஸ்.ஆர்.ஓ ஏவுகணைத் தளத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

உலக தரிசனம்



சிட்னியில் நடைபெறும் டேவிஸ் கோப்பை இரட்டையர் டெனிஸ் ஆட்டத்தின் போது பிரிட்டிஷ் ராணி எலிசபெத்தைப் போல முகமூடியணிந்து, பீர் அருந்தி மகிழும் குறும்புக்கார ரசிகை.

# ஈராக்மீதான போர் தவிர்க்க முடியாத ஒன்று

## அமெ. பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் மீதான போர் தவிர்க்க இயலாத ஒன்றென அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கன்டோலீசா ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைச் செயற்படுத்தும் இறுதிவாய்ப்பைத் தூக்கி எறிந்து விட்டார். ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தை செயற்படுத்தாது விட்டால், பயங்கரமான விளைவுகளை ஈராக் எதிர் கொள்ள வேண்டும் என ஏற்கெனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டு விட்டது.

அத்துடன் ஈராக்கின் ஆயுதங்கள் தொடர்பாக எதிர்ப்பு நடவடிக்கைகள் 12ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமானதொன்றெனவும் கூறி ரைஸ் ஈராக்கிலுள்ள பேரழிவுகளை ஏற்படுத்தம் ஆயுதங்களையும், பயங்கரவாதிகளையும் ஒழிப்பதுடன் சதாம் ஹுசைனைப் பதவி விலக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அதே வேளை ஈராக் மீதான போர் குறித்து அதிபர் புஷ்சிடம் பரிந்துரைகளை வழங்கி வருகின்றோம். எனினும் அமெரிக்க அதிபர் ஜோஜ்டபிள்யு புஷ்சே இதில் இறுதிமுடிவு எடுப்பார். என்று அவர் மேலும் கூறினார். (க-2)

# டென்னிஸ் முன்னணி வீராங்கனை விளையாட்டிலிருந்து ஓய்வு

சர்வதேச டென்னிஸ் போட்டிகள் 12 வயதில் சாதிக்கத் தொடங்கி கடந்த 10ஆண்டுகளில் டென்னிஸ் உலகின் முன்னணி வீராங்கனையாகத் திகழ்ந்த மார்ட்டினா ஹிங்கிஸ் டென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

16 வயதில் உலகின் முதல் நிலை ஆட்டக்காராக உயர்ந்த மார்ட்டினா ஐந்து கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார். 1997ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓப்பின் டென்னிஸ் போட்டிகள் சாம்பியன் பட்டத்தை வென்ற மார்ட்டினா 20வது நூற்றாண்டில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற மிகக் குறைந்த வயது வீராங்கனை என்கின்ற பெருமையைப் பெற்றார்.

வில்லியம்ஸ் சகோதரிகளின் ஆதிக்கம் துவங்கும் வரை உலகின் தரவரிசையில் முதல் நிலை வீராங்கனை யாக திகழ்ந்த மார்ட்டின் ஹிங்கிஸ், காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக கடந்த சில மாதங்களாகவே சரியாக ஆட முடியாமல் சிரமப்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் ஜெனீவாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மார்ட்டினா ஹிங்கிஸ், இதற்கு மேலும் டென்னிஸ் போட்டிகளில் தன்னால் நீடித்திருக்க முடியாது என்றும், விரைவில் ஓய்வு பெறப் போவதாகவும் தெரிவித்தார்.

'எனது வாழ்க்கையின் மிகப் பெரும் அங்கமாக டென்னிஸ் இருந்தது. இப்பொழுது அது முடிந்து விட்டது. ஆனால் வாழ்க்கை தொடர்கிறது' என்று, மார்ட்டினா, படிப்பிலும், மற்ற பணிகளிலும் ஈடுபடப்போவதாகக் கூறியுள்ளார்.

ஜெர்மனியின் அபார ஆட்டக்காரர் ஸ்டெ.்பி கிரா.்பிற்குப் பிறகு டென்னிஸ் உலகின் அழகிய, அபாரமான, அற்புத ஆட்டக்காராக மார்ட்டினா திகழ்ந்துள்ளார். (க)

## இந்திய மாணவர் மீது ரஷ்யாவில் தாக்குதல்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இரண்டு இந்திய மாணவர்கள் மீது இனவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. செயிண்ட் பீட்டர்ஸ்பார்க்கில் உள்ள நெவ்ஸ்கி பிராஸ்பெக்ட் வீதியில் 4 பேர் கொண்ட மொட்டைத் தலையர்கள் இந்திய மாணவர்களைத் தாக்கியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, இதே பகுதியில் மொரிஷஸ் நாட்டைச் சேர்ந்த மாணவன் இம்மாத ஆரம்பத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். (க-3)

# பாதுகாப்பு துறைசாதனங்களை இந்தியாவுடன் சேர்ந்து விற்கவேண்டும்

## உலக நாடுகளுக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் அழைப்பு

(புதுடில்லி)

உலகச் சந்தையில் பாதுகாப்புத்துறை தொடர்பான சாதனங்களை இந்தியாவுடன் கூட்டாகச் சேர்ந்து தயாரித்து விற்பனை செய்ய உலக நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

பெங்களூரில் ''ஏரோ இந்தியா 2003'' கண்காட்சியைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் பெர்னாண்டஸ் இவ்வாறு கூறினார்.

உலக அளவிற்குத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்துறை மட்டுமல்லாது இந்தியாவின் கட்டமைப்பானது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்து திகழ்கிறது என்றும், எனவே ஒட்டு மொத்த செலவீனத்தை மற்ற நாடுகளுடன் கூட்டாகச் சேர்ந்து வடிவமைப்பதால் கட்டுப்படுத்த முடியும் என்று பெர்னாண்டஸ் கூறினார்.

விமானப் போக்குவரத்துத் துறைத் திட்டங்கள் கூட்டு விற்பனைத்திறன் போன்றவற்றால் மிகப்பெரிய வாய்ப்புகளை வான்வெளித்துறையினர் பெற முடியும் என்று பெர்னாண்டஸ் கூறினார். பாதுகாப்புத்துறை சாதனங்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு இந்தியா வெளிப்படையான அறிவிப்புகளை வெளியிட்டிருப்பதோடு, 26சதவீத அளவிற்கு முதலீடுசெய்ய முன்வந்திருப்பதாக அவர் கூறினார்.

உலக அளவில் தரம் வாய்ந்த பாதுகாப்புத் துறை சாதனங்கள் உருவாக்கக்கூடிய தகுதி படைத்த தொழிற்சாலைத் தளம் இந்தியாவில் இருப்பதாகவும், எனவே உலக நிறுவனங்களின் வரவை இந்தியா எதிர்நோக்கியிருப்பதாகவும் கூறினார்.

இந்திய வான்வெளி பொறியியல் துறையானது விமானத் தயாரிப்பு மற்றும் ஒத்துழைப்புத் துறையில் 50முதல் 100பேர் பயணம் செய்யக்கூடிய வகையிலான விமானங்களைத் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருவதாக குறிப்பிட்டார்.

இந்த கண்காட்சியில் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட மிகச் சிறிய விமானமான சாராஸ் ஜெட் விமானம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அடுத்த சில மாதங்களில் இந்த விமானம் நடைமுறைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



பத்தாத் நகரில் ஒரு மசூதியில் நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்ட சிறுமி ஒருத்தி போரைத் தவிர்க்க மாட்டார்களா என்ற ஏக்க முகத்துடன் காணப்படுகிறாள்.

## அமெரிக்க அதிபர் புஷ் ஐ.நா விடம் கோரிக்கை

(வாஷிங்டன்)

தம்வசமுள்ள பேர் அழிவு தரும் ஆயுதங்களை ஈராக் அழிக்க வேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் சபை உறுதியாக இருக்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கப்பட்டிருப்பதற்கான புதிய ஆதாரங்களை இராஜாங்க அமைச்சர் கொலலிஸ்பவல் சில தினங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்த இருந்தார்.

எனினும், ஈராக் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட பெரும்பாலான உலக நாடுகளும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-2)



ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கப் போவதாக அச்சுறுத்தல் விடுதெதிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொல்கொததாவில் உள்ள அமெரிக்க தகவல் மையத்தின் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஃபார்வர்டு பிளாக் கட்சி தொண்டர்கள்.

### தற்போதைய பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படலாம்

# ஜே.வி.பி-ஸ்ரீ.ல.சு.கட்சி தலைவர்கள் பரந்த அளவிலான கூட்டணி அமைக்க முனைப்பு

### கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் ஒன்றிற்கு விரைவில் முகம் கொடுக்க வேண்டி வரலாம் என்ற பரவலான எதிர் பார்ப்பை அடுத்து பரந்த அளவிலான கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வியாழனன்று இரு கட்சிகளினதும் தலைவர்கள் நடத்திய கூட்டத்தில் ஜே.வி.பி. இரண்டு பிரேரணைகளை சமர்ப்பித்திருந்ததாகவும் அவற்றுள் ஒன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பானதென்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கல் மாதிரிகளைப் பின்பற்றிய தீர்வொன்றை ஆராய்வதற்காக இரு கடசிகளினதும் தலைவர்கள் மட்டத்தினர் விரைவில் இந்தியா சென்று சில மாதிரிகளை நேரில் பார்வையிடவுள்ளனர் என்றும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐ.தே.மு. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓராண் டுப் பூர்த்தி தினமான பெப்ரவரி 22ஆம் திகதி நாடெங்கிலும் கறுப்புக் கொடிப் போராட்ட மொன்றை நடத்துவதற்கு தான் ஏற்பாடுகளை செய்து வருவதாக சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர் அனுரா பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் சுமார் பத்து லட்சம் மக்கள் பங்கு பற்றுவரென்றும், ஜே.வி.பி யினர் முழு ஆதரவுடன் இது நடத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பிரதம பாதுகாப்பு அதிகாரியாகவிருந்த நிஹால் கருணாரத்ன, அர்ஜூனா ரணதுங்க ஆகியோருக்கு கட்சி அமைப்பாளர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு மேலாக அனுரா தன்னை உயர்த்திக் காட்டும் ஒரு நடவடிக்கையே இது என்று கட்சி ஆதரவாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர். (க)

## ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலைக் கண்டித்து நாடு முழுவதும் பேரணிக்கு அழைப்பு

### மேல் மாகாண ஆளுநர் ஏற்பாடு

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா நடத்தவிருக்கும் தாக்குதலைக் கண்டித்து இலங்கையி லுள்ள அனைத்து முஸ்லிம் மக்களும் எதிர்வரும் 1ஆம் திகதி முதல் நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு பேரணிகளை நடத்த வேண்டும்.

இவ்வாறு நேரில் மாகாண ஆளுநர் அலவி மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா நடத்தவிருக்கும் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமானால் ஈராக்கில் பெருமளவு உயிர்ச் சேதம் ஏற்படும். எனவே இதனைத் தடுத்து நிறுத்த நாம் முன்வர வேண்டும்.

அத்துடன் அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கையினை எதிர்த்து எதிர்வரும் 1ஆம் திகதி முதல் நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம்கள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்றார். (க-10)

## கணக்காய்வு அலுவலர்கள் விரைவில் நியமனமாவர்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களிற்கு மாதாந்த வரவு-செலவு விபரங்களின் கணக்குப் பரிசோதனை ஊழியர்களின் வரவு, வாகனப் பாவனை ஆகியவற்றைக் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வு அலுவலர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி பணிப் பாளர் து.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் சுற்று நிருபம்மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் தங்கள் பகுதியி லுள்ள உள்ளூராட்சி மன்றத்தில் 3 பொறுப்பு வாய்ந்த அதிகாரி களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக தனக்கு அனுப்பி வைக்குமாறும், இத்தெரிவில் உள்ளூராட்சி மன்ற கணக்குப் பதிவாளர் கட்டாயம் இடம்பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-252)

## காரைநகரில் கண்காட்சி ஆரம்பம்

(கல்வயல்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பணிமனை நடத்தும் தையல் பயிற்சி கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை காரைநகர் சமுர்த்தி வங்கிக் கட்டடத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-36)

## தந்தை செல்வாவுடன் பழகியவர்களை கௌரவிக்க ஏற்பாடு

### அனுபவங்களைப் பகிரவும் முயற்சி

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு மாகா ணத்தில் தந்தை செல்வாவுடன் 1949 முதல் 1965 வரையிலான காலத்தில் கட்சி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களை இனங்கண்டு கௌரவிப்பதற்கு தந்தை செல்வா நினைவு அறங் காவல் குழு தீர்மானித்துள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் கூட்டம் அதன் உப தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று முன்தினம் மாலை நினைவாலயத்தில் கூடிய போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப் பட்டதாவது,

தந்தை செல்வாவின் காலத் தில் அவரது அரசியல் சமூகப் பணிகளில் அவரோடு தோளோடு தோள் நின்று பல்வேறு கால கட்டத்தில் பணியாற்றியவர்கள் வட கிழக்கு மாகாணத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இவர்களை உரிய முறையில் இனங்கண்டு அவர்கள் மூலம் தந்தை செல்வாவுடனான அனுபவங்களைப் பகிர்ந்து பதிவு செய்து அவற்றினை ஆவணமயப் படுத்துவதுடன், எதிர்வரும் ஏப்ரல் 26 இல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள தந்தை செல்வாவின் சிரார்த்த தினத்தில் அத்தகையவர்கள் கௌரவிக் கப்படவும் உள்ளனர்.

எனவே தந்தை செல்வாவுடன் அரசியல் சமூகத் துறைகளில் இணைந்து பணியாற்றியவர்கள் பற்றிய விபரங்களை செயலாளர் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு, 35, நெல் லியடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறங்காவல் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-77)

## அமரர் ஜீ.ஜீயின் 26 ஆவது சிரார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிப்பு

(தென்மராட்சி)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபித தலைவரும் சட்டமேதையுமாகிய அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 26 ஆவது சிரார்த்த தினம் நேற்றய தினம் யாழ்ப்பா ணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

குருநகரில் அமைந்துள்ள அமரரின் திருவுருவச் சிலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம் பலம் கஜேந்திர குமார், மாவட்ட இணைப்பாளர் சீ.வீ,கே.சிவஞானம், கட்சியின் உபதலைவர் சி.பொ.வ.க.மு. முதலியார் ஆகியோர் மலர் மாலைகள் அணிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள காங்கிரஸ் இல்லத்தில் உபதலைவர் முதலியார் தலை மையில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். அலுவலகத்தில் நேற்று நண்பகல் 12.00 மணிக்கு மாநகரசபை உறுப்பினர் ச.அரவிந்தன் தலைமையில் நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது.


மாநகர சபை உறுப்பினர் ச.அரவிந்தன், தமிழர் விடுத லைக் கூட்டணி உறுப்பினர் துரைமணி ஆகியோர் மறைந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு இவ் நிகழ்வின் போது உரை நிகழ்த் தினார்கள். (க-77-07)



சட்ட மாமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 26 ஆவது நினைவு தினத்தின் போது தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இடம்பெற்ற நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்
படங்கள் : க.பவன்







# விவசாயிகளின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க முயலவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி தெரிவிப்பு

(தென்மராட்சி)

விவசாயிகளின் பிரச்சினைகளை சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டும் தீரப்போவதில்லை. அவர்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றிய வழி முறைகளை இனங்கண்டு தீர்க்க முனையவேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி எஸ்.இராஜதுரை கடந்த சனி யன்று விவசாய பீடத்தில் நடை பெற்ற ''யாழ்ப்பாணத்தில் விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தியின் எதிர்காலம்'' பற்றிய ஆய்வுப் பட்டறையில் உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வுப் பட்டறையில் விவசாயிகள், திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் மற்றும் விவசாய பீட மாணவர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

விவசாய பீடாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

யாழ்ப்பாணத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தி என்பது சூதாட்டம் மாதிரி. எமது நுகர்ச்சி 100 முதல் 200 மெற்றிக் தொன்ஆக இருக்க வேண்டும். எமது உருளைக் கிழங்கு வெளி யில் போகுமாயின் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டும். அல்லது அறுவடையை வெவ் வேறு மாதங்களில் உற்பத்தி செய்யவேண்டும். அறுவடை செய்யும் உருளைக் கிழங்கினை கூடுதலான காலத்துக்கு சேகரித்துக் கொள்ள புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

எமது பாரம்பரிய பழவகை கள் அருகிக் கொண்டு போகின் றன. அதிகமான மாமரங்கள் காய்ப்பதில்லை. இவை ஏன் காய்க்காமல் இருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். எமது உற்பத்திகளை அதிக ரிக்கச் செய்ய வேண்டும். பலாப் பழம், முருங்கைக்காய், கத்தரிக் காய் போன்றவற்றினை பதப்ப டுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சிக்க வேண்டும்.

கால்நடை அபிவிருத்திக்கும் வளர்ப்புக்கும்தேசிய மட்டத் திலும பிராந்திய ரீதியிலும் ஒதுக்கப்படும் நிதி மிகவும் குறைவாக இருக்கின்றது. பால் உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுகின்ற மாடுகளின் தொகை குறைந்து வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் எஸ்.நவரத்தின ராஜா அங்கு 'உள்ளூறவுள்ள அபிவிருத்தி வியூகங்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றும் போது,

விவசாயிகளால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளை திணைக்களத்தினால் தீர்த்து வைக்க முடியாது. நாம் நடைமுறையில் திட்டங்களை அமுல் செய்து காட்ட வேண்டும். சொல்வதை விட செய்வது தான் சிறப்பானதாகும். தென் பகுதியிலுள்ள விவசாயிகள் சுயசார்புத் தன்மையில் இருக்கின்றார்கள். ஆனால் எமது விவசாயிகளோ இன்னும் வறுமை நிலையிலேயே இருக்கின்றனர்.

எமது நாட்டின் கொள்கை வகுப்பாளர்களால் தான் நாடு சீரிழிகின்றது. மக்களதும், விவசாயிகளினதும் அடிப்படைத் தேவைகள் இன்னமும் நிறைவேறாத நிலையில் இருக்கின்றன. எமது உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படாத நிலையில் லாபத் தன்மையை எதிர்பார்க்க முடியாது. நாம் தோல்விகளைப் பற்றியே எண்ணக் கூடாது. எதிர் பார்க்கக் கூடாது. நாம் பிரச்சினை களில் இருந்து ஓடிவிடக் கூடாது. பொருளாதாரத் தடைகளில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்கவேண்டும் எனக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பால சுநதரம்பிள்ளை உட்படப் பலரும் உரையாற்றினர். (க-77)

# வெசாக் பண்டிகையை விரிவாகக் கொண்டாட ஏற்பாடு

## குழு ஒன்றும் நியமிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டின் வெசாக் பண்டிகையை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தாய்லாந்தின் பிரதமர் தக்ஷின் சினவாத்ராவையும் அழைத்திருக்கிறது.

2003 ஆம் ஆண்டின் வெசாக் கொண்டாட்டங்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை முடிவு செய்வதற்கென தேசியக் குழு ஒன்றையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளதாகவும் புத்த சாசன அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்தார்.

கொண்டாட்ட ஒழுங்குகள் தொடர்பான வரைவுத் திட்ட மொன்றையும் அதிவணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களிடம் காண்பித்து அவர்களின் சம்மதத்தையும் பிரதமர் பெற்றுக கொண்டுள்ளார்.

இவ்வாண்டின் வெசாக் கொண்டாட்டங்கள் ''புத்த தர்மத்தை ஒட்டி ஒழுகுபவர் புத்த தர்மத்தினால் காப்பாற்றப்படுவார்'' என்ற தொனிப்பொருளில் உள்நாட்டிலும ''இலங்கையின் வெசாக் பண்டிகை-ஒப்பற்ற அனுபவம்'' என்னும் தொனிப் பொருளில் வெளிநாடுகளிலும் கொண்டாடப்படுவதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன: ஐந்து நாட்கள் நடைபெறவிருக கும் சமயக் கொண்டாட்டங் களுக்குமென அமைச்சர் லொக்கு பண்டார தலைமையிலான தேசியக குழுவுடன் வேறும் ஐந்து உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

மே மாதம் 15 ஆம் திகதி கொண்டாட்டம் நடைபெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## பொது நிர்வாக சேவைக்கு

# தெரிவு செய்யப்பட்டோருக்கு விரைவில் நியமனம் வழங்குக

## மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

பொதுநிர்வாக சேவையில் சேர்த்துக் கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு துரிதகதியில் நியமனங்களை வழங்குமாறு மக்கள் விடுதலை முன்னணி கேட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு நடத்தப் பட்ட போட்டிப் பரீட்சையில் 185 பேர் சித்தியடைந்துள்ள போதிலும் இதுவரை அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து, இவர்களுக்கு விரைவில் நியமனங்களை வழங்குமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் கமல்கெட்டி பொது நிர்வாக அமைச்சிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (க-10)

# மூன்று நூல்கள் ஒன்றாக வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ கி.சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பிறந்த நாளை ஒட்டி சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஆதரவில் நிகழும் பஞ்சகுண்ட பூஜா, நவகுண்டபூஜா, விவித வித்யா நூல்களின் வெளியீட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு வேத சிவாகம குருகுல கலா சாலை மண்டபத்தில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ ப.மனோகர சிவாசாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயரும் நூல் அறிமுக வுரையை பிரம்மஸ்ரீ து.சுந்தர மூர்த்திக் குருக்கள், வேரற் கேணிக் கந்தசாமி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.சோமஸ் கந்தக் குருக்கள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-3)

## அத்துருகிரிய பாதுகாப்பு இல்ல முற்றுகை

# கண்டி ஏ.எஸ்.பி யின் மனு மஜிஸ்திரேட்டில் தள்ளுபடி

(கொழும்பு)

அத்துருகிரிய, மிலேனியம் சிற்றியில் இராணுவத்தினர் வைத்து பேணி வந்த பாதுகாப்பு இல்ல முற்றுகை நடவடிக்கை தொடர்பாக கண்டி ஏ.எஸ்.பி உடுகம் பொல தாக்கல் செய்திருந்த மனுவை கண்டி மஜிஸ்திரேட் லியொன் செனவிரத்ன வெள்ளி யன்று தள்ளுபடி செய்தார். இராணுவத் தளபதிக்கும் ஏனைய ஆறுபேர்களுக்கும் எதிராக இம்மனுவை உடுகம்பொல தாக்கல் செய்திருந்தார்.

குற்றஞ்சுமத்தப்பட்ட இராணுவத் தளபதியோ,இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளரோ ஏனைய வர்களோ கிரிமினல் நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்தமைக்கான சான்றுகள் ஏதுமில்லை என்றும் வழக்குகளை வாபஸ் பெறுமாறும் சட்டமா அதிபர் கடந்தவாரம் உத்தரவிட்டிருந்ததை தொடர்ந்தே மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மிகவும் பயங்கரம் விளைவிக்கக் கூடிய வெடி பொருட்களை உரிய பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப படுத்தி வைத்ததற்கெதிராக உடுகம்பொல இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (க)

# செய்தித்துளிகள்

### 465 விவசாய குடும்பங்களுக்கு கடனுதவி

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி, விவசா யத்தை ஊக்குவிக்கும் முகமாக வசதிகுறைந்த விவசாயிகளுக்கான கடன்களை வழங்கவுள்ளது.

இவ்வங்கி கடந்த இரு ஆண்டுகளில் [illegible] செய்கைக்காக சுமார் 46 லட்சத்து 19 ஆயிரம் ரூபாவை வழங்கி யுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 465 குடும்பங்கள் இதனால் நன்மையடைந்துள்ளன. (உ-10)

### சேவைக்காலப் பயிற்சி

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், நகர சபைகள் போன்றவற்றில் கடமை புரியும் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களிற்கு நவீன முகாமைத்துவம் தொடர்பான சேவைக்காலப் பயிற்சி வழங்கப் படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி இம்மாதம் 28 ஆம் திகதியும் மார்ச் 1,2 ஆம் திகதிகளிலும் மானிப்பாய் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி வழங்குவதற்காக கொழும்பிலிருந்து பத்துப பேரைக் கொண்ட அரசாங்க நிர்வாக சேவை அதிகாரிகள் குழு இங்கு வருகை தரவுள்ளது. (உ-252)

### நாளை திருநாள் திருப்பலி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உள்ள லூர்து மாதா ஆலயத்தில் நாளை மாலை 5 மணிக்கு செபமாலையுடன் திருநாள் திருப்பலி இடம் பெறவுள்ளது. (க-51)

### விவசாய பீட பாவனைக்கு விடுதி

(யாழ்ப்பாணம்)

இதுவரை பயணிகள் தங்குமிடமாக உபயோகிக்கப்பட்ட கோணாவளை வீதியில் அமைந்துள்ள விடுதி, யாழ். பல்கலைக் கழக விவசாய பீட மாணவர்கள் இடப்பற்றாக்குறை காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கோரிக்கைப்படி விவசாய பீட பாவனைக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனால் சபையினால் நடாத்தப்பட்டு வந்த விடுதிச் சேவை தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது. (உ)

### டெல்ரா மெத்திரின் விசிறப்படுகிறது

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வட்டுக் கோட்டைப் பகுதியில் ஒருவருக்கு மூளை மலேரியா நோய் அவதானிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியைச் சுற்றியுள்ள குடியிருப்புகளிற்கு டெல்ரா மெத்திரின் என்ற மருந்து மலேரியா தடை இயக்கப்பிரிவு அதிகாரிகளின் மேற்பார்வையில் விசிறப்பட்டு வருகின்றது.

கடந்த இரு நாட்களில் வட்டுக்கோட்டை மாவடிப் பகுதி யில் 50 ற்கும் மேற்பட்ட வீடுக ளிற்கு இம்மருந்து விசிறப்பட்டது. (உ-252)

### இருமாடிக் கட்டடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர் வதிவிடப்பற்றாக் குறையை போக்கும் முகமாக கோணாவளை வீதியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபைக் கட்டட வளவினுள் ஒரு இரண்டு மாடிக்கட்டடம்அமைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் இதற்கான அத்திபாரக் கல்லை அண்மையில் நாட்டி வைத்தார். (உ)

### மெய்வன்மைப் போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு மங்கயற்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலை மையில் ஐக்கியதீப சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற வுள்ளது. (உ-126)

### மீள் நியமனம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓய்வு பெற்ற இரு கிராம அலுவலர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (உ-126)

### விபரங்களைப் பதியவும்

(கல்வயல்)

தென்மராட்சி கல்வயல் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 'அ' அட்டையை உடைய குடும் பங்கள் தங்களது தேசிய அடை யாள அட்டை, வங்கிப் புத்தகம், பங்கீட்டு அட்டை ஆகியவற்றை கிராம சேவகர் அலுவலகத்தில் பதியுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்வு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகவே இப்பதிவுகள் இடம் பெறவுள்ளன. (க-36)

### இலக்கிய போட்டிகள்

(கொழும்புத்துறை)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் இலக்கியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் 23 ஆம் திகதிகளில் நடத்தப்பட வுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புகிறவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பதிவு களை மேற்கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (க-51)

### இலவச கணனிப் பயிற்சி

(ஊர்காவற்துறை)

தீவக கோட்டத் தமிழ் மாண வர் ஒன்றியத்தினால் தீவகத்தில் இலவச கணனி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி இலவசக் கணனி வகுப்புக்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட கணனிப்பயிற்சி வேலணை கிழக்கில் இடம்பெறவுள்ளது. (க-75)

### இறுதிக் கூட்டம் நாளை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர சபையின் இறுதிக் கூட்டம் நாளை (செவ்வாய்) காலை 10 மணிக்கு தலைவர் பெ.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-77)

# நிலத்தடி நீரை உயர்த்தும் செயற்பாட்டினால்

# நீர்வளம் பேணிநில வளத்தையும் காப்போம்

மனித வாழ்வுக்கு மட்டுமல்லாது தாவரங்கள் உள்ளிட்ட அனைத்துச் சீவராசிகட்கும் நீர் அத்தியாவசியப் பொருளாக அமைகிறது. நீர்நிலைகள், கடல்நீர், ஆற்றுநீர்,குளம் குட்டை, ஓடைநீர் ,கிணற்றுநீர்,நிலத்தடி நீர்,(இமையமலைபோன்ற)மலை முகடுகளிலும்,வடதென்துருவப் பகுதிகளிலும் உள்ள உறை நிலை நீர், பவன மண்டலத்தில் உள்ள ஆவி நிலை நீர் எனப் பல வகைப்படும்.

விஞ்ஞானிகளின் கோட்பாட்டின் படி அனைத்து நீரும் மூலக்கூறுகள் ஒன்றாக இருப்பினும் எமது பிரதேசத்துக்கு இவற்றுள் ஒரு சில நிலைகளில் அமைந்திருக்கும் நீர் மட்டுமே உதவுகிறது.வாழ்வில் கடல் நீரின் பங்களிப்பு நன்நீரை விட மிகக் குறைவே. நீரின் மூலக்கூறுகள் ஒன்றாக இருப்பினும் அது சேர்ந்த நிலத்தைப் பொறுத்து கலககப்பட்ட கலவைகளைப் பொறுத்து நிலைக்கு நிலை மாறுபட்டுக் காணப்படுகிறது.

திடம்,திரவம்,வாயு என்ற மூன்று நிலைகளிலும் உலகில் உள்ள நீர் எத்தனை கன கிலோமீற்றர்களோ அந்த அளவு மாறாது என்றும் அண்ணளவாக இருந்தபடியே இருக்கும். பீகாரில் பெருமழை-வெள்ளம் என்றதும் உலக நீரின் அளவு கூடி விட்டதென்றோ,இயற்கைக் காரணிகளால் வட கடல் மட்டம் 5 செ.மீற்றர்களால் குறைந்ததும் உலக மொத்த அளவில் குறைந்து விட்ட தென்றோகொள்ள இடமில்லை.

மனித உணவுக்கும் சில மருத்துவத் தேவைகட்கும் கடல் அங்கிகள் உபயோகப்படுகின்றன. கப்பல் போக்கு வரத்துக்கு கடல் நீர் ஆதாரமாகிறது. இருப்பினும் பூமியில்வாழும் உயிரினங்கட்கு (தாவரங்கள் உட்பட) நன்நீரே உபயோகப்படுகிறது. வான் பயிர்களால் தோட்டச்செய்கை நெல், கோதுமை, சோளம், கால் நடை போன்ற பரநதஅளவிலான விவசாயசெய்கை, கால்நடை வளர்ப்புப்போன்றன வற்றுககும் மனிதன் குடிக்க ,சமைக்க, சுத்திகரிக்க எதற்கொடுத்தாலும் நன்நீரே தேவைப்படுகிறது.

## நீர் மாசடைதல்

எமது பிரதேசத்தில் உள்ள குளங் குட்டைகள் நிலத்தடி நீர் அனைத்துமே நன்நீர்தான். எமது செயற்பாடுகளாலும், முற்காப்பு நடவடிக்கைகள் இல்லாததால் இயற்கைக் காரணிகளாலும் எமது பிரதேச நீர் மாசடைகிறது. உவர் நீராகிறது. கிணற்றிலிருந்து எடுத்து உபயோகித்த கழிவு நீரை கிணற்றுக் கணித்தாகத் தேங்கவிடல்.இதன்ால் ஆகர்ண சக்தியால கீழிறங்கும் நீருடன் நாம் பிரயோகித்த சோடா சோப்புப் போன்ற இன்னோரன்ன இரசாயனப் பொருட்கள் சிறுகச் சிறுகக் கீழிறங்கிக் கிணற்றுநீருடன் கலக்கின்றன. வெளி நீர் தேக்கத்தில் பல்கிப் பெருகும் கிருமிகளும் கீழிறங்கி நீரை மாசுபடுத்துகின்றன. கிணற்றுக்கு அண்மையில் மலசலக்குழியையோ இக் குழிக்கணித்தாக்க்கிணற்றையோ அமைத்தல். முன் கூறியது போல் இச் செயலாலும் கிணற்றுநீர் மாசுபடும். தோட்டச் செய்கை விவசாயம் போன்றவற்றுக்கு சமச்சீரற்ற உரம், இரசாயன உரப்பிரயோகம்,மிதமிஞ்சிய இரசாயன மருந்துப் பிரயோகம் ஆகியவற்றாலும் நன்நீர் நிலைகள் மாசடையும். பயிர்களின் பாதுகாப்புக்கு இரசாயன மருந்துகள் அவசியம்தான்.பூச்சி, பங்கஸ்,வைரஸ் போன்றன பயிர்களைத் தாக்குகின்றன. இப்படியாகத் தாக்கங்களை இனங் காணாமல் மருநதுப்பிரயோகம் செய்வதனால் நோய் குணமடையாமை கண்டு மேன்மேலும் மருந்தைப் பிரயோகிக்கிறார்கள்.ஒரு நோயும் இல்லாத வேளைகளிலும் முற்காப்பு நடவடிக்கை என்ற மருந்துப் பிரயோகம் செய்கிறார்கள். பூச்சிக் கொல்லிகளை விட களைகொல்லிகளே பொதும் நீரை மாசடையச் செய்கின்றன.


வண்டி வாகனங்களைக் கழுவும் 'சேவீஸ்'நிலையழ்,வாகனங்களைப பழுதுபார்க்கும் 'கரேச்' ஆகியவற்றில் வேலை செய்வோர் கழிவு 'ஓயில்', கழுவிக்கழித்த மண்ணெண்ணெய் ஆகியவற்றை அப்படியே ஊற்றி விடுகின்றனர். அவை நிலத்தடி நீரை மாசுபடுத்தும்.கொப்பறா பிழியும இயந்திரம்,நெல்ஊறப்போட்டு அவித்துக்குற்றும் அரிசிமில் போன்றனவற்றின் கழிவு நீர் அயலில் உளள குட்டைகளில் சோநது தேங்கு வதாலும் நீர் மாசடைகிறது.

கிராமப் புறங்களிலே நீர் தேங்கும் 'வில்' களிலே (மிகச்சிறிய அளவிலான குளங்கள்) இறங்கி நீராடுவதாலும்,துணிமணிகளைக் கழுவுவதாலும் கால் நடைகளை நீராட்டுவதாலும நீர் மாசடைகிறது.

## நிலத்தடி நீர்


நிலத்தடி நீருக்கு ஆதாரமாவது மழையே. நிலத்தடி நீர் இருவகைப் படும்.நிலத்தின் மேற்பரப்பில் நாம் 'வில்' லுரு நீர்த்தேக்கங்களைக் காண்கின்றோம். அதேபோன்று நிலத்தின் கீழே 100-200 மீற்றர் ஆழத்திலே நீர்ப் படுக்கைகள் (WATER-BED) அமைந்திருக்கின்றன. இது இடத்துக்கிடம் ஆழம் மாறுபடும். நிலத்தில் வீழ்ந்த மழைநீர் கசிந்து கீழே இறங்கி நீர்ப்படுக்கை வரை செல்லும். அந்த நீர்ப்படுக்கையை விட்டு கசிந்து அதன் கீழே செல்லாது.(படம்1)அவ்வளவு கெட்டியரன படையால் நீர்ப் படுக்கை இயற்கையாகவே அமைந்துள்ளது. இதை நிலத்தடி நிலைநீர் எனலாம்.

படம்-1



உதாரணமாக ஒரு திறந்த உரு நீர்த்தாங்கியை நில மட்டத்துக்குக் கீழே தாட்டு வைத்து விட்டால் மழைக் காலங்களில் நீர் புகுந்து மழையின் அளவுக்கேற்ப நிறைந்து விடும்.நில மட்டத்துக்குக் கீழே தாட்கப்பட்ட இததொட்டிக்குள் பாறாங்கறகளைப் போட்டுமேலே சற்று மண்ணும் போட்டு மூடி விட்டால் தொட்டி-தாங்கி இருபபதேதெரியாது. இருந்தும் இப் பாறாங்கற்களின் ஊடு சந்துகளெல்லாம் நீர் நிறைந்திருக்கும். (படம்-2) இதுவே செயற்கைத் தாங்கி. ஆனால் பூமியில உள்ளதோ இயற்கைத்தாங்கி.

படம்-2



## நிலக்கீழ் அருவி

இதற்கு நிலாவரைக் கிணற்றுக்குக் கீழ் உள்ள நீரோட்டத்தையோ அல்லது கீரிமலைக் கேணிக்கு வந்து பின் கடலுள் விழும் நிலக்கீழ் அருவியையோ குறிப்பிடலாம்.

நிலக்கீழ் அருவி எவ்வண்ணம் உருவாகிறதென்று கவனிப்போம். ஏற்கனவே நிலத்தடி நிலை நீரை அறிந்து விட்டோம்(படம்-3)

படம்-3



நிலத்தினுள் மலைக்கற்கள், சுண்ணாம் புக்கற்கள், கிரவல்கள், என்று பலபல கெட்டியான படிகங்கள் உள்ளன. மழை காரணமாக நீர்ப்படுக்கை யிலிருந்து நீர் மட்டம் உயர உயர வரும். நீர்ப்படுக்கைக்குச் சற்று மேலே சமச் சீரான தாகவோ,அல்லது பாறாங்கற்களினூடே சந்து பொந்து களாகவோ, இடக்கு முடக்குகளாகவோ துவாரங்கள் இருக்க இடமுண்டு. இந்த ஊடு சந்துகள் மிக நீண்ட தூரத்துக்கும் தொடர்ச்சியாக இருக்க வாய்ப்புண்டு. எத்தனையோ கி.மீற்றர் நீளத்துக்கும் நீர் பாய்ந்து (நிலக்கீழாக) கடலையோ அல்லதுஇன்னொரு நீர்ப்படுக் கையோ அடைய வாய்ப்புண்டு. மழை காரணமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து இந்த துவாரங்களைத் தொடும்பட்சத் திற்றான் ஆகர்ண சக்தி காரணமாக நிலக் கீழ் அருவி பாயத் தொடங்கும் .இத்துவாரங்களுடாக வெளியகலும் நீரை விட நீர்ப்படுக்கைக்குச் சேர்க்கப்படும நீரின் அளவு கூடுமானால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து தேங்கி பல நாட்களுக்கு இத்துவாரத்தினூடாக வழங்கவாய்ப்பு ஏற்படும். மேற்றரையிலுள்ள ஆறுகளைப்போன்று நிலக் கீழ் அருவிகள் பாய்வதற்கும் புவியீர்ப்புச் சக்தியே காரிய கர்த்தாவாக அமைகிறது. கடல் மட்த்திலிருந்து 400m உயர்த்திலே ஒரு கிராமம் இருப்பதாகக் கணித்துக் கொள்வோம். அக்கிராமத்தின்தரை மட்டத்திலிருந்து 100Mஆழத்திலே நீாப் படுக்கை இருப்பதாக வைத்துக் கொள்வோம் இந்த நீர்ப்படுக் கையில் 50M உயரத்துக்கு நீர் தேங்கி இருப்பதாகவும் கருதுவோம்.

ஆகவே இப்படுக்கையில் உள்ள நீா கடல் மட்டத்துக்கு மேலே 300M. தொடக்கம் 350Mவரை இருந்தே ஆக வேண்டும். புவியீர்ப்பினால் நீர் தாழ் நிலத்தை நோக்கி ஓடும். இந்த நீர் நிலையிலிருந்து கடல் வரை ஒரு சமச்சீரான துவாரம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் கெட்டியான பாறாங்கற்கள் கிரவல்களினூடோ சமச்சீரற்ற துவாரங்கள் அகன்று ஒடுங்கி உயர்ந்து பதிந்து வளைந்து நெழிந்து இருக்க வாய்ப்புண்டு. இச் சந்துகள் வழியே நிலத்தடி நீர் நிலைகளிலிருநது நீரோட்டங்கள் காணப்படும். இந் நீரோட்டங்களின் வேகம் காலத்துக்குக்காலம் மாறுபடும். அதன் காரணம் மழைவாயிலாக நிலத்தடி நீரின் உயர்வு தாழ்வுகளாகும்.

## நீர் தாக்குப்பிடிக்கும் காலம்

நிலத்தடி நீரைக் கிணறுகள் ,குழாய் கிணறுகள் மூலம் பயிர்ச் செய்கை உட்பட பலப்பல தேவைகட்காக வெளியே எடுக்கிறோம். அச் சிறிய குழாயக்கிணறுகளும் ஊறிக் கொண்டே இருக்கின்றன. அந்த நீர்ப் படுக்கையில் உள்ள நீரை மட்டும்தானே நாம் வெளியே எடுக்க முடியும்.


இயந்திரங்கள் மூலம் வாரம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் றூட் நீரை சாதாரணமாக வெளியே அகற்றுகிறோம் என்று வைத்துக்கொளவோம்.அந்த நீர் நிலையில் 100 ஏ.றூட் நீர் இருந்தால்100 வாரங்களில் நீர் அற்று விடும். இந்த இரண்டு வருடங்களுக்குள் பொழியும் மழையின் அளவைப் பொறுத்து மேன்மேலும் நிலத்தடி நீர் சேகரிக்கப்படுகிறது. அதனாலேயே வற்றாத ஜீவ ஊற்றாக இக்குழாய்க்கிணறு ஒரு தோற்றப்பாட்டைத் தருகிறது. எதற்கும் அடிப்படை ஆதாரம் மழையே!.

## ந'லத்தடி நீர் உவர் நீராகுதல்

முதலில் கரையோரப் பகுதிகளிலேயே உவர் நீராகும் தன்மை தொடங்கும். நிலத்தடி நீர் கசிந்து கடல பக்கமாகப் போய்க் கொண்டிருக்குமானால் உவர் நீராகும் தன்மை மிக மிகக்குறைவு. ஆனால் நிலத்தடி நீர்மட்டம் கடல் மட்த்திலோ அல்லது அதற்குக் கீழோ இருக்கு மானால் கடல் நீர் கசிந்து கரை யோரக் கிராமங்களில் கீழ்ப்புறத்தில ஊடுருவும்.மெல்ல மெல்ல இது பரவிப் பலப்பல நீர் நிலைகளையும் உவர் நீராக்கி விடும்.

வெப்பத்தினால் கடல் மட்டமும் நிலத்தடி நீ மட்டமும் சம அளவாகக் குறைகின்றன என்று கூற இடமில்லை. மழை குன்றி நிலத்தடிக்கு நீர் சேராத காலங்களிலும் நிலக்கீழ் அருவிகளாலும் கசிவினாலும் குழாய்க்கிணற்று நீர்ப்பிரயோகத்தாலும் வெப்பத்தினாலும் நிலத்தடி நீர்மட்டம் குறையும். கடல் நீர் ஆவியாகிக் குறைவதை விட நிலத்தடி நீர் ஆவியாவதற்கு பலப்பல காரணங்கள் இருந்தும்முக்கியமாக மூன்று வழிகளைக் கூறலாம் .1) இயற்கைக் காரணிகளால் கடல் நீர் சலனமடையும் அளவுக்கு நிலத்தடி நீர் சலனமடையாமல் இருப்பதால் கடல் நீருக்கு நிலையற்ற வெப்பமும் நிலத்தடி நீருக்கு நிலயான வெப்பமும் சேருகிறது. (2) சூரிய வெப்பம் படாத வேளைகளில் கடல் நீர் ஆவியாகும் வாய்ப்புக் கிடையாது. ஆனால் நிலத்தடி நீருக்கு மேல் இருக்கும் கிரவல், கல், மண் ஆகியன சூரிய வெப்பம் ஏற்றப்பட்ட பின் சிறுகச்சிறுக நிலத்தடி நீருக்கும் கொடுப்பதால் கூடிய நேரம் நிலத்தடி நீருக்கு வெப்பம் கிடைப்பதாலாகும். (3)நிலத்தடி நீருக்கு மேல் உள்ள பொருட்கள் சிறுகச் சிறுக ஊறுவ தால் பரந்து விரிந்து ஆவியாகும் வாய்ப்பு அதிகம்.

படம்-4



ஆகவே நாம் என்றும் நிலத்தடி நீர்மட்டம் கடல் மட்டத்திற்கு கீழ் இறங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கடல் மட்டத்திற்கு கீழ் இறங்கினால் கடல் நீர் கசிந்து நிலத்தடி நீர் நிற்க வேண்டிய இடத்தை ஆக்கிரமித்து விடும். சில சில நிலத்தடி நீரோட்டங் களும் எதிர்த் திசையாக ஓடி எமது நிலத்தடி நீர் நிற்க வேண் டிய இடத்தை அடைந்து விடும்.(படம்4)

## நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திருக்க வேண்டும.

மழையின்மையால் நிலத்தடி நீர் மட்டம் கடல் மட்டத்துக்கோ அல்லது அதன கீழோ வருமானால்குழாய்க்கிணற்றிலிருந்து எடுக்கும் நீர் முழுமையும் கடல் நீராகவே இருக்கும். நிலத்தடி நீரை தூயதாக வைத்திருக்க நிலத்தடி நீர் மட்டத்தை முடிந்தவரை உயரமாக வைத்திருப்பதும் நீர்மடடம் இறங்கும் காரணிகளைக் கண்டு அவற்றைத் தடுப்பதும் அவசியம். எழுது மட்டுவாள், பளை, இயக்கச்சி ஆகிய இடங்களை ஆன்றோர் பச்சிலைப் பள்ளி என்றே பெயர் சூட்டி விட்டனர்; ஏன்? மழை குன்றிய காலங்களிலும் ஆங்கே தாவரங்கள் பச்சைப் பசேலென்றே காணப்படுவதாலாகும். இயற்கையாகவே ஆங்கே மழை நீர் தேங்கி நிலத்தடி நீராகி நிலத்தடி நீர் மட்டம் மிக உயர்வாக- தரைக்குச் சற்றுக் கீழே இருப்பதாலாகும். ஆனால் வடமராட்சியைப் பொறுத்த மட்டில் மழை நீர் முக்காலே மூன்று வீசமும் மழை விட்டு ஓரிரு மணித்தியாலங்களுக்குள் கடலை அடைந்து விடுகிறது. அங்கே நிலத்தடி நீர் சேரிக்கப்படும் நிகழ்தகவு மிகமிகக் குறைவு. மற்றைய கிராமங்களில் இல்லாத அளவிற்கு ஒட்டுமொத்தமாக வடமராட்சிப் பகுதியில் றோட்டுக்கள், தெருக்கள், ஒழுங்கைகள் 90 வீதமும் ஒரு வடிகால் அமைப்பிலேயே காணப்படுகின்றன. மிகச் சில தெருக்கள் தெரு என்ற பார்வையைத்தந்தாலும், அதன் ஏதோ ஒரு புறத்திலாவது சிறு வடிகால் அமைப்புத் தென்படும். வடமராட்சிப் பகுதியில் பெரும் பகுதியும் (ஏன் முழுவதுமென்றே கூறலாம்) மழை நீர் உடனுக்குடன் நிலத்தின் மேற்புறத்தால் பாய்ந்து கடலுட்புகுந்து விடுவதால் மழைநீர் நிலத்தில் இறங்கி நிலத்தடி நீராக தேங்க-தேக்க வாய்ப்பில்லை. இன்று ஒரு பெருமழை-வெள்ளம் என்றாலும் நாளையோ மறு நாளோ அதன் சுவடே தெரியாமற் போய்விடுகிறது.

## வழிந்தோடும் மழைநீர

பச்சிலைப் பள்ளியில் மாரியில் ஒரு நாள் 3 அங்குல மழை பெய்தால் 10 நாடகளுக்கு மிளகாய்,கத்தரி போன்ற பயிரகட்கு நீர் இறைக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால் வடமராட்சியின் பெரும்பாலான தோட்டநிலங்கடகோ ஒரு நாளில் 6 அங்குல மழை பெய்தாலும் மேற்கொண்டு 5-6ஆம் நாட்களில் நீர் பாய்ச்ச வேண்டிய தேவை ஏற்படும்.காரணம் பச்சிலைப் பளளியில் மழைநீர் முற்று முழுவதும் தரையால் உறிஞ்சப் பட்டு கீழாக இறங்கிக கொண்டே போவதாலும், இப்படியே இறங்கும் நீருக்கும் நிலத்தடி நீருக்கும் ஊடு வெளியின்றி ஈர்த்தொடர்பு இருப்பதாலும் ஆகும். ஆனால் வடமராட்சிப் பகுதியிலோ, எனில் தரையால் உறிஞ்சப்பட்டு கீழிறங்கும் ஈரப்பற்றுக்கும் நிலத்தடி நீருக்கு மேலே உள்ள ஈரப்பற்றுக்கும இடையே ஊடு வெளி-ஈரப்பற்றற்ற வரண்ட பகுதி ஆண்டுச் சராசரியாகப் பார்க்குமிடத்து அதிக நாட்கள் காணப்படும் மழை நீர் சொற்பமாக மண்ணால் உறிஞ்சப்பட்டாலும், அதற்குக் கீழுள்ள வரண்ட பகுதியிலுள்ள வெப்பம் காரணமாக உறிஞ்சப்பட்ட சொற்ப நீரும் விரைவில் ஆவியாகி விடுகின்றது.

வடமராட்சியன்தென்புறத்தே அமைந்துள்ள சிறு கடலேரிக்கு வட கரையில அமைந்துள்ள சிறு சிறு கிராமங்களைப்பார்ப்போம் குடத்தனை, அம்பன், முள்ளி, குடவத்தை, துன்னாலை, யாக்கரை, கிராய், சோழங்கன், மண்டான், கல்லுவம், தோப்பு இவற்றுடன் வேறு சில கிராமங்களும் அமைந்துள்ளன. இவற்றுள் எல்லாம் பலப்பல பழைய கிணறுகள் காணப்படுகின்றன. யாழ்.... தீபகற்ப மக்கள் சீமெந்து பிரயோகிக்கத் தொடங்கியதற்கு முற்பட்ட கிணறுகளும் பல உள்ளன. அங்குள்ள முதியோருடன கலந்துரையாடிய போது, 'அவை கணிச்சி-கொந்தாலியால் பருமட்டாக மட்ட சுத்தம் செய்யப்பட்ட சுண்ணாம்புக் கற்களை வரிசை வரிசையாக அடுக்கி ஊடுகள்- சந்துகளை களிமண் கிழங்குத்தோகை போன்றவற்றால் அடைத்து நிரப்பி முன்னோர் கட்டினர்' என்றனர். 150-200 ஆண்டுகட்கு முற்பட்ட கிணறுகளும் காணப்படுகின்றன. இவற்றுட் சில இன்றும் உருக்குலையாமற் காணப்படுகின்றன. அன்று அவர்கள் முழுக்க முழுக்க மனித வலுவையே பிரயோகித்திருப்பார்கள். பொறி முறைகளையோ இயந்திரங்களையோ கிணறு வெட்ட- கட்ட உபயோகித்திருக்க இடமில்லாத காலகட்டம்.

யாழ்.... தீப கற்பத்தில் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நம் முன்னோர்கள் கூட்டு முயற்சியால் 20 மனித வலுவில் ஒரு கிணற்றை வெட்டவும் 100 மனித வலுவில் கல் சேகரித்து மட்ட சுத்தம் செய்து கட்டவும் முடிந்திருக்கும்.ஆகவே கிணறு தோண்டுவதை விட சுவர் கட்டி ஒப்பேற்றுவது மகா கஷ்டம். அவர்கள் கிணறு தோண்டியதும் உவர் நீராக இருந்திருந்தால் அதைக் கட்டியிருக்க மாட்டார்கள். தூர்த்திருப்பார்கள். அல்லது துரவாக பிரயோகித் திருப்பார்கள். ஆகவே இக்கிணறுகள் கட்டிய காலங்களில் நன்நீராக இருந் திருக்குமென்பது துணிபு. அங்குள்ள முதியோரைக் கேட்ட போது ''50-60 ஆண்டுகட்கு முன் லேசான உப்பு நீராக இருந்தது. இப்போ கூடிய உப்பாகப் போச்சுது' என்றார்கள்.வேறுசிலர் முன்பு முத்துப் போல் இருந்தது. இப்போ லேசான உப்புக் கூருகிறது என்றார்கள். பலரும் பல தரப்பட்ட பதிலைக் கூறினார்கள். இருந்தும் இவர்கள் கூறறுக்கு ஓர் ஒற்றுமை இருக்கிறது. உவர்ப்பு வீதம் கூடிக்கொண்டு வருகிறது. உவர்ப்பு வீதம் குறைந்திருப்பதாக யாரும் கூறவில்லை.

## கடல் நீர் உயர்தல்

கடல்நீர் எம் நிலத்தடி நீரை ஆக் கிரமிக்க முனைப்பாகவுள்ளது. இதே வேளை, கடல் மட்டமும் ஆண்டுக்கு மி. மீற்றர் கணக்கில் உயர்ந்து கொண்டே வருகிறது. 1) பூமியின் சுழற்சி வேகத்தினால் மேடு பள்ளங்கள் அணுவணுவாக சமநிலையை நோக்கி நகர்கின்றன. 2)காற்றினால் தரையிலே கணவர்ய்கள் பள்ளத்தாக்குகள் காலப்போக்கில் காற்றடி வண்டல் சமவெளிகள் உருவானது போல தூசுகள் துகற்களை காற்று கடலிலும் சேர்க்கிறது. கடலலைகள் கொணர்ந்து கரையொதுக்கும் மணல், இல்மனேட் போன்றவற்றை விட மழை நீரரிப்பினாலும் காற்றினாலும் கடலுட்புகும் மண்தூசு துகள்களே கனஅளவில் கூடியதாக இருக்க வாய்ப்புண்டு.3)வட தென்-துருவப் பகுதிகள் மலை முகடுகள் ஆகியவற்றில் இருக்கும் பனிக்கட்டிகள் (ஓசோன் ஓட்டைகாரணமாகவும் பிற காரணங்களாலும் பூமியின் வெப்ப அதிகரிப்பினால்) உறை நிலைக்கு மாறும்.கன அளவைவிட உருகுநிலைக்கு-திரவ நிலைக்கு மாறுவதே அதிகம். மேற்கூறிய மூன்று காரணங்களாலும் கூட்டுச் செயற்பாடாக ஆண்டொன்றுக்கு கடல் மட்டம் மிகச்சிறிய அளவில் உயர்ந்து கொண்டே வருகிறது.

ஆகவே நாம் உடனடியாகச் செயலில் இறங்கி நிலத்தடி நீர் வளத்தைக் காப்பாற்றாமல் விடுவோமானால் நீர் வளத்தை மட்டுமல்லாது நில வளத்தையும் காலப்போக்கில் இழக்க நேரிடும்.

## நிலத்தடி நீரை உயர்த்தும் வழிவகைகள்

1)ஒவ்வொருவரும் தத்தமது நிலத்தில் பொழியும் மழை நீரை வெளியே பாய்ந்தோடாமல் பார்த்துக் கொண்டால் நிலத்தடி நீர் தானாகவே மேம்பட்டுக் கொள்ளும்.

2)கிராம மட்டத்தில் மக்கள் ஒன்று கூடி ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியாக நீர் அவம் போவதைத் தடுக்கலாம்.

3)பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் இப்பணியை மேற்கொள்ள லாம். அனறேல் நீர் வழங்கல் சபை கரிசனை எடுக்கலாம்.

4)பயிர்களைப் பாதுகாப்பதற்காக விவசாய இலாகா முன்னின்று அரச உதவியுடன் இப்பணியை நிறைவேற்றினால் நீரும் நிலமும் காப்பாற்றப்படும்.

.நாம் நீரைப் பேணாது விடுவோமானால் கால நீரோட்டத்தில் நீர் எம்மைப் பேணாது புறந்தள்ளி விடும்.

செல்வி வீ. கருணா
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## இன்று ஒரு தகவல்

### மனவாட்டம் ஒரு நோய்

ஒரு அம்மா! அவருக்கு 35வயது இருக்கும். குடும்பத்தில் எந்தக் கஷ்டமும் இல்லை. இருந்தாலும் காரணம் இல்லாமல் பிள்ளைகள் மேலே எரிந்து விழுவது வழக்கம். பிள்ளைகள் அழும்... உடனே அவர் மனமும் சங்கடப்படும். இன்னொரு அம்மா... நல்ல வேலையில் இருக்கிறவர். வாரத்துக்கு ஒரு தடவையாவது தலைவலி வந்துவிடும். இவருக்கு உடம்பில் எந்தக் கோளாறுமில்லை. மனது மட்டும் சரியாக இருக்காது. தூக்க மாத்திரை கையில் வைத்திருப்பார். 30 - 35வயதுடைய பெண்களுக்கு சர்வசாதாரணமாகக் காணப்படுகிற மனக்கோளாறு இது. இதற்குப் பெயர் மனவாட்டம் (Depression). மன மடிவு என்றும் சொல்லலாம். இந்த நோய்க்கு அறிகுறி என்ன தெரியுமா?

மனத்தில் வருத்தமான உணர்வு இருக்கும். அடிக்கடி அழலாம் போலத் தோன்றும். முன்னர் எந்தெந்தச் செயல்களில் ஆர்வம் இருந்ததோ அவைகள் குறைந்துவிடும் அல்லது சுத்தமாகவே ஆர்வமில்லாமல் போய்விடும். சில பெண்கள் இளவயதில் பக்கத்திலிருக்கிறவர்களிடம் கலகலப்பாகப் பேசுவார்கள். வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் இருக்கும். இப்பொழுது அவற்றிலெல்லாம் ஆர்வமில்லாமல் போய்விடும், எந்த வேலை செய்தாலும் சீக்கிரம களைப்பு அடைந்து விடுவது மாதிரிஆகிவிடும்,

நமக்கு யாருமே உதவி இல்லை, நம்மை எல்லாருமே கைவிட்டு விட்டார்கள் போல இருக்கிறதே! என்ற உணர்வுகள் உண்டாகும். தன்னைத்தான் குறை சொல்லிக் கொள்வார்கள். நாம் தப்பு பண்ணிவிட்டோம் போல் இருக்கிறதே என்று தோன்றும். குற்றம் பண்ணிவிட்டதாக நினைத்துக் கஷ்டப்படுவார்கள். பசி இருக்காது. தூக்கத்திலே தொந்தரவு இருக்கும். (செக்ஸ் ஈடுபாடு இருக்காது... மலச்சிக்கல் இருக்கும்) அடிக்கடி செத்துப்போய்விடலாம் என்கிற உணர்வு வரும். தற்கொலை பண்ணிக் கொள்ளலாம் என்கிற எண்ணம் உண்டாகும். சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபடுவார்கள். சிலருக்குப் பல விதமான உடல்வலிகள் இருக்கும். பலவீனம் இருக்கும். சீக்கிரமாகக் களைப்படைந்து விடுவார்கள். இவைகள் மனவாட்ட நோய்க்கான தன்மைகள். இந்த மனவாட்டம் (Depression) நோயை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று தானாக உண்டாக்கிக் கொள்வது. இன்னொன்று எதிர்விளைவை உண்டுபண்ணுகின்ற அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட மனவாட்டம்.

தானாக உண்டாக்கிக் கொள்கின்ற மனவாட்ட நோயிருக்கிறது பாருங்கள். அதற்கு ஏதாவது சூழ்நிலைகாரணமாக இருக்கலாம். அல்லது இல்லாமலும் போகலாம். மூளையில் Deparine அல்லது Serotomin இன் அளவு குறையும் போது இந்த மனவாட்டம் உண்டாகிறது. இதற்கு ஓரள்வு பிறவிக்காரணங்கள் கூட இருக்கலாம். குடும்பத்தில் வேறு சிலரும் வரலாம். பாதிக்கப்பட்ட பெண்ணைப் பார்ப்பதற்குப் பலவீனமாகத் தெரியும். கடுமையான குற்ற உணர்வு இருக்கும். தனியாக இருப்பதற்கு ஆசைப் படுவார்கள். நள்ளிரவில் எழுந்து உட்கார்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். கொடூரமான முறையில் தற்கொலை பண்ணிக் கொள்ள முயற்சி பண்ணுவார்கள். தீ வைப்பது, அமிலத்தைக் குடிப்பது, தூக்கில் தொங்குவது இப்படிப் பல.

தானாக வரவழைத்துக்கொள்கிற மனவாட்டநோய்வந்து மறையக் கூடிய நோய் - ஒருதடவை வந்தால் மூன்றிலிருந்து ஆறுமாதம வரை நீடிக்கும். இடைப்பட்ட காலங்களில் நோயாளி இயல்பாக இருப்பார். (மாதவிலக்கு நிற்கிற சமயத்தில் இது சாதாரணமாகக் காணப்படுகிறது.)

எதிர் விளைவை உண்டுபண்ணுகிற அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட மனவாட்ட நோய், கணவன் - மனைவி மாமியார் மருமகள் இப்படிப்பட்ட உறவு முறைப் பிரச்சினைகள், தோல்விகள், எரிச்சல்கள், அலுவலகப்பிரச்சினை போன்ற சூழ்நிலைகளால் உண்டாகிறது. எல்லாவற்றிற்கும் மருந்து இருக்கிறது. மார்க்கம் இருக்கிறது. கவலைப் படவேண்டியதில்லை. தைரியமாக இருக்க வேண்டும். உளவியல் மருத்துவம் இங்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

சில பெண்கள் இருக்கிறார்கள் எதற்கும் அலட்டிக் கொள்வதில்லை. ஒரு அம்மா அப்படித்தான் தன் கணவனை அழைத்துக் கொண்டு ஒரு மனநோய் மருத்துவரிடம் வந்தார். ''டாக்டர்! எங்கள் வீட்டுக் காரர் திடீரென்று ஒரு மாதிரியாக ஆகிவிட்டார். வித்தியாசமாக நடந்து கொள்கிறார். எப்படியென்றால், இவர் தன்னையே ஓர் ஒட்டடைக்குச்சியாக நினைத்துக்கொள்கிறார். அப்படி நினைத்துக்கொண்டு தன் தலையாலேயே வீட்டிலுள்ள ஒட்டடைகளையெல்லாம் துடைத்துக் கொண்டிருக்கிறார்'' என்றார். ''எவ்வளவு நாட்களாக இப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் டாக்டர். ஒருவாரமாக இப்படி இருக்கிறது என்றார் அந்த அம்மா.

அப்படியென்றால் முன்னரே ஏன் அழைத்துக்கொண்டு வரவில்லை என்று கேட்டார் டாக்டர். ''வீடு முழுவதும் சுத்தமாகட்டுமே என்று காத்துக் கொண்டிருந்தேன் டாக்டர்'' என்றார் அந்த அம்மா!

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அரும்பொருட் கடத்தலில் ஈடுபட்ட கும்பல் சிக்கியது

(ஏழாலை)

குடாநாட்டிலுள்ள சைவ ஆலயங்களில் தெய்வ விக்கிரகங்கள் மற்றும கோயில் வாகனங்களைத் திருடி விற்பனை செய்து வந்த திருடர் கோஷ்டி வசமாக மாட்டிக் கொண்டது.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையினால் மேற்படி திருட்டில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து பலஇலட்சம் ரூபா பெறுமதியான தெய்வவிக்கிரகங்கள், மற்றும் மரச்சிற்பங்கள் மீட்கப்பட்டுள்ளது.

மல்லாகம் கல்லாரைப் பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சுன்னாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த பெர்ணான்டோ, குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி குணவர்த்தனா ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே திருடர் கோஷ்டியினரைக் கைது செய்துள்ளனர்.

இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். விசாரணைகளை தீவிரப்படுத்துவதன் மூலம் பல்வேறு திருட்டுக்கள் தொடர்பான தகவல்கள் வெளிவருமென்று நம்பப்படுகிறது.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள அரும்பொருட்களையும் புராதன வரலாற்றுச்சின்னங்களையும்திருடும் கோஷ்டியினர் தென்பகுதிக்கு அவற்றைக் கடத்திச் சென்று விற்பனை செயகின்றமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. (இ-12)

## கண்ணிவெடி அகற்றும் பணிதுரிதம்

(தென்மராட்சி)

தென்மராட்சி மட்டுவில் வைரவர் கோவிலை அண்டியுள்ள பிரதேசத்தில் (கண்டி வீதியை அண்டிய பிரதேசம்) கண்ணி வெடிகளை அகற்றும் பணியை ''ஹாசோறஸ்ற்'' எனும வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம மேற்கொண்டு வருகின்றது. (க-36)

## அடிகாயம்

(யார்க்கரு)

பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தகராறு அடிகாயத்தில் முடிந்தது.

கரவெட்டி கோயிற் சந்தை எனும் இடத்தில் கடந்த திங்கட் கிழமையன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த த.சிறீசங்கர் (வயது 32) என்பவர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் (க-31)

# உலகவங்கி உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும்

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உலகவங்கி வழங்கும் நிதி தொடர்பான உடன்படிக்கையொன்று ஒரு வாரத்தினுள் கைச் சாத்திடப் படவுள்ளது.

நேற்று முன்தினம் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடைபெற்று முடிந்த 5ஆம் கட்டப் பேச்சு வார்த்தைகளில் இதற்கான் தீர்மானம் எடுக்கப்பட்டது என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடுக்கட்டத்தை அடைந்து வரும் நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் உடனடி மனிதாபிமான, மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்களுக்கான நிதியுதவியினை மிக விரைவாகத் தந்துதவுமாறு அரச தரப்பு பிரதிநிதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சர்வதேசத்திடம் வலியுறுத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## இராசி பலன்

**10.02.2003**

(தை 27, திங்கள்)

நவமி காலை 6.19வரை
கார்த்திகை மா.6.36வரை
இராகுகாலம் 8.04 - 9.34
சுபநேரம் 12.34 - 2.04

**மேடம்**
கடுமையான வார்த்தை, வேலைக் கஷ்டம், நிலைமாற்றம், தனவிரயம்.

**இடபம்**
கற்பனை மிகுதி, மாதர் நட்பு, முயற்சி கைகூடும், சயனசுகம்.

**மிதுனம்**
பிதா சிந்தை, குடும்பசுகம், காரிய அலைச்சல், பெரியோர் மனஸ்தாபம்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, கீர்த்தி, தொழில் விருத்தி.

**சிங்கம்**
சுபநிகழ்ச்சி, தூரதேசச் செய்தி, எடுத்த காரியம் கைகூடும், மேன்மை.

**கன்னி**
ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, ஆரோக்கியக் குறைவு, கட்டுப்பாடு.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசன சுகம், வாகன பயம்.

**விருச்சிகம்**
திடீர் பயணம், உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், தனலாபம்.

**தனுசு**
நினைத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், தேகநலன், போசன சுகம்.

**மகரம்**
கௌரவக் குறைவு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், உஷ்ண ரோகம்.

**கும்பம்**
மனச்சஞ்சலம், விரும்பாத உறவு, அபகீர்த்தி, போசனசுகம்.

**மீனம்**
கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குக

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை விரைவில் அதிகரிக்குமாறு அரச ஊழியர் சங்கங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என அரசதுறை தொழிற் சங்கங்களின் ஏற்பாட்டாளர் டபிள்யூ. எஸ். பிஜதாஸ பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித்தலைவராக இருக்கும் போதே தீர்மானித்திருந்தார் என்றும்,

தற்போது அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# முல்லைமாவட்டச் செயலகம் சொந்த இடத்தில் இயங்கும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் எதிர்வரும் 12ஆம்திகதி முதல் மீண்டும் முல்லைத்தீவு நகரத்தில் இயங்கவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனம் ஒன்று 15இலட்சம் ரூபாவையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 8இலட்சம் ரூபாவையும், வன்னிப் பலநோக்குக கூட்டுறவு நிதியம் ஏழரை இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளது.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த 12வருடங்களாக இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புப் பகுதியில் மாவட்டச் செயலகம இயங்கி வந்தமை தெரிந்ததே. (உ-8)

# வன்னி மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப் பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியில், வன்னி மாவட்டத்துக்கான ஒதுக்கீடுகள்அதிகரிக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேருக்கும் வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கென தலா 5மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்துக்கு 13.66மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 10.3மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 3.4மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வன்னிமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசித்து வருவோர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 2.5மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பரமகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-8)

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்*

— குறள் —

# வலம்புரி

## பாதை மாறும் பேச்சு வார்த்தை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடை பெற்று வரும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்குமா என்ற சந்தேகம் இப்போது மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளின் சுற்றுக்கள் ஐந்தை தாண்டிய நிலையிலும் தீர்வுத் திட்டம் குறித்து எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை. இப்படியே பேச்சுக்கள் நீண்டு சென்றால் எப்போது தீர்வு காண்பது. ஆறிய கஞ்சி பழம் கஞ்சி என்ற யதார்த்தமான பழமொழிக்கு சொந்தக்காரர்கள் நாம். அப்படியிருந்து சமாதானப பேச்சுக்களில் ஏதேனும் முக்கிய விடயங்கள ஆராயப்படுவதாகத தெரியவில்லை. புதிய புதிய பிரச்சினைகளை ஆராய்வதாக பேச்சுக்கள் நகர்கின்றனவே தவிர தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத்தர்வு காண்பதாக பேச்சுக்கள முன்னெடுக்கப் படவில்லை.

பாராளுமன்றக்குழுக்கள வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சமஷ்டி முறை குறித்து ஆராய்ந்தன. எனினும் அவைபற்றி ஏதேனும் தீமானஙகள் எடுக்கப் பட்டதாக தெரியவில்லை.

இப்படியே காலங்கள் கடந்து செல்லுமாக இருந்தால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை அறிவிக்கவு் சமாதான முயற்சி அப்படியே அடிபட்டுப் போகவும் சரியாகவே இருக்கும்.

தற்போது தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சமாதானப் பேச்சுக்கள் நீடிப்பதை விரும்பவில்லை. உடனடியாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே தென்னிலங்கை மக்களின் விருப்பமாகும். இந்நிலையில் மக்களின் அபிலாசையை நிறைவேற்ற அரசு தவறுமாக இருந்தால் இனவாதிகளின் தவிரபிரசாரம் மக்களைத் திசை திருப்பிவிடலாம் அதன் பின்னர் சமாதானத்திற்கு மக்கள்ஆதரவை திரட்டுவது என்பது முடியாத காரியம். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசும் -விடுதலைபுலிகளும் விரைந்து எட்ட வேண்டும்.

அரசும் விடுதலைப்புலிகளும இணைந்து எட்டப்படுகின்ற தீர்வானது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினால் நிறைவேற்றப் படவேண்டும்.

அவ்வாறு அரசும் புலிகளும் இணக்கம் கண்ட தீர்வுக்குப் பாராளுமன்றத்தின்அங்கீகாரம் கிடைக்காத பட்சத்தில் அடுத்த கட்ட முடிவு என்ன? ஏனவே நம்பியிருந்து ஏமாந்து போகின்ற நிலைவரை செல்லாமல் இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை முதலில் அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் அப்போது தான் அரசினது நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ளமுடியும். அதேவேளை இப்போது இலங்கையின் பக்கம் தமது பார்வையைத் திருப்பியுள்ள சர்வதேச சமூகம் தொடர்ந்தும் இலங்கையின் விடயத்தில் அக்கறை கொண்டிருக்கும் என கூறமுடியாது. ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதிலேயே சமாதானப் பேச்சு வார்த்தை திசை திருப்பட வேண்டும். ஆக உலக நாடுகளின் நிதியுதவியை மட்டும் மையமாக வைத்து பேச்சுக்கள் நகர்த்தப்படுமாக இருந்தால் நிலமை படுமோசமாக மாற்றமடையுமென்பது திண்ணம்.

# நெடுந்தீவுச்சம்பவம் மிகவும்துக்ககரமானது

## பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் அரசியல் பொறுப்பாளர்

(கொழும்பு)

நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற துயரமானதும், ஆத்திர மூட்டுவனவானதுமான சம்பவம் நடைபெறக்காரணம் இலங்கை கடற்படையும் இவ்வாறான சம்பவத்தை தவிர்ப்பதற்கு கண்காணிப்புக்குழு துரித நடவடிக்கை எடுக்காமையே ஆகும்.

இவ்வாறு நேற்று முன்தினம் பேர்ளினில் அரசு-புலிகள் இடையே இடம்பெற்ற 5ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தையினை அடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவத்தை தவறான முறையில் செய்தி ஊடகங்கள் பெரிதும் திரிபு படுத்தியுள்ளன.

புலிகள் ஆயுதம் கடத்திவந்தமையினாலேயே இலங்கை கடற்படையினர் சோதனையிட முயன்றனர் என்றும், அவ்வேளை புலிகள் தம்மைத் தாமே குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டனர் என்றும் பலவாறாகத் திரிபு படுத்தி தெரிவித்திருக்கின்றது.

இச்சம்பவத்தின் உண்மையான விடயம் என்னவென்றால் நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்காக எமது உறுப்பினர்கள் சென்ற படகு இயந்திரக் கோளாறினால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தன. அப்போது அவர்களின் படகில் எதுவித ஆயுதமும் இருக்கவில்லை.

இவ்வேளையில் தொலைத் தொடர்பின் மூலம் வன்னியில் உள்ள எமது கடற்படைத் தலைமையகத்திற்கு தமது நிலைப்பாட்டை எடுத்துச் சொன்னார்கள்.

இதனையடுத்து, மன்னார் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த எமது போராளிகள் சிலர் நெடுந்தீவிற்கு விரைந்தனர்.

இந்நிலையிலேயே, கடற்படையினா எமது போராளிகளின் படகினை சூழ்ந்து முற்றுகையிட்டு சோதனையிடவும் தமது படகுடன் கட்டியிழுக்கவும் முயன்றனர்.

இதனாலேயே எமது போராளிகள தற்கொலை செய்ய வேண்டியிருந்தது.

இதேவேளை, கண்காணிப்புக் குழு இப்பிரதேசத்திற்கு வந்து தமது படகுக்களை சோதனையிடுவது பற்றிய தகவல் எமக்கு கிடைத்தது.

பின்னர் அதாவது நிலை மோசமடைந்து எமது போராளிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வேளை எமக்கிடையிலான தொடர்புகள் அச்சமயம் துண்டிக்கப்பட்டன.

இவ்வாறு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட சில மணி நேரங்களின் பின்னர் இத்தகைய துயரச் சம்பவம் குறித்த செய்தி எமக்குக் கிடைத்தது.

எனவே, இச்சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை கடற் படையும் கண்காணிப்புக்குழுவுமே ஏற்க வேண்டும்.

அத்துடன், இனியும் இவ்வாறான



செயல்கள் இடம்பெறக் கூடாது என்ற உத்தரவாதத்தினைத் தரும்படி இரு தரப்பினரிடமும் கேட்டுள்ளோம் என்றார்.

இதேசமயம், கடற்பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டம் பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் புதிய திட்டங்களை விரைவாக வரையவும் அரசைக் கேட்டுள்ளதுடன், அவர்கள் அதற்கு இணங்கியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-10)

# புலிப்பெண் போராளிகள் இடுப்புப் பட்டி அணியத் தடை

## கண்காணிப்புக் குழுவிடம் முறையிட முடிவு

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் இடுப்புப் பட்டி அணிந்து செல்ல முடியாது என முகமாலையில் உள்ள படையினர் தடை விதித்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் மானிப்பாய்ப் பகுதியில் உள்ள பொதுமக்களைச் சந்திக்கச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளை இடுப்புப் பட்டியுடன் செல்லக் கூடாது என இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தடுத்ததாகவும் வேலணையில் இடுப்புப் பட்டி அணிந்து சென்றபெண் போராளிகளை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தம்மிடம் சாதாரண இடுப்புப் பட்டி அணிந்து செல்லலாம் என்று கூறியுள்ளதாகவும், தாங்கள் அவ்வாறே செல்வதாகவும் ஆனால் படையினர் இதற்கும் தடை விதித்துள்ளதாக விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட மகளிர் அணித் தலைவி கலைவிழி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் இன்று சந்திக்கவுள்ளதாகவும் இச்சந்திப்பில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப் படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (க-43)

# ஒரு வழிச் சோதனை நடத்த படைத்தரப்பு இணக்கம்

## கஜேந்திரகுமார் எம். பியின் பேச்சின்விளைவு

(திருநெல்வேலி)

குருநகர் பகுதியில் ஒரு வழிச் சோதனையை மட்டும் நடத்துவதற்கு படைத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் குருநகர் படை அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தையை அடுத்து மேற் கண்டவாறு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் பகுதி மக்கள் எதிர் நோக்கும் அவலங்கள் குறித்து குருநகர் படை அதிகாரிகளுடன் கஜேந்திர குமார் பொன்னம்பலம் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடாத்தினார்.



புதிய சீனோர் பகுதி சோதனை நிலையத்தை மூடவும் படையினர் இணக்கம் தெரிவித்தனர். (க-7,43)

# ஆக்கப்போட்டியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆரம்ப கல்வி கற்பித்தல் உபகரண ஆக்கப் போட்டியும், கண்காட்சியும் இன்று காலை 9.30 மணிக்கு கல்வியங்காடு இந்து த.க.பாடசாலையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ந-5)

—நற்பிரஜைகளை உருவாக்குவதில்—

# பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் தம் பங்களிப்பை நல்க வேண்டும்

## ஹாட்லி விளையாட்டுப் போட்டியில் எடுத்துரைப்பு

(இருபாலை)

"கல்வி எங்ஙனம் மனிதனுக்கு அவசியமாகின்றதோ அவ்வாறே விளையாட்டுத் துறையும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமாகின்றது. பாடசாலையில் இத்துறையை வளர்ப்பதற்கு பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் முன்நின்று பாடுபட வேண்டும். இதன் மூலமே ஆளுமையுடைய நற்பிரஜை களை உருவாக்கலாம்" என ஹாட்லிக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டியில் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட கல்லூரியின பழைய மாணவரும், ஓய்வு பெற்ற கிராம சேவை அலுவலருமான வி. சேதுநாயகம் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் வே. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் உரையாற்றும்போது, ஒவ்வொரு கல்விச் சமூகத்திலும் நான்கு வகை யான மாணவர்கள் காணப்படுகின்றனர் ஒன்று கல்வித்துறையில் ஆர்வம் காட்டுபவர், மற்றையது விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டுபவர். கல்வி, விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டுபவர் மூன்றாமவர். இவ்விரு துறையிலும் ஆர்வம் காட்டாதவர் நான்காமவர். எனவே பேதமற்ற மாணவரை உருவாக்குவது டன் பொறுமை, விடாமுயற்சி, சகிப்புத் தன்மை போன்ற குணாம்சங்களை வளர்த்தெடுப்பதற்கும் கல்வியுடன் இணைந்து விளையாட்டுத் துறையையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றார். (க-11)

## தினசரி தியானம்

### நிர்விகல்ப சமாதி

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மன அமைதியுடன் இரு. விடாமுயற்சியால் இந்நற்குணத்தைப் பயின்று கொள். அமைதி ஒரு பாறை போன்றது. கோபவிருத்திகள் என்னும் அலைகள் அதன் மேல் மோதலாம். ஆனால் அந்த அலைகளால் அப்பாறையைத் தகர்க்க முடியாது.

மாறுபாடற்றதும்; சலனமற்றதுமான ஆத்மாவைக் குறித்துத் தியானி. நீ மன அமைதி பெறுவாய். தெய்வீக ஒளி அமைதி கொண்ட உள்ளத்தில் தான் குடிகொள்ளும். அமைதி பெற்ற சாதகன் தான் ஆழ்ந்த தியானம் செய்து, நிர்விகல்ப சமாதியை அடைய முடியும்.

சுவாமி சிவானந்தர்

# அமைச்சர் ஜயலத் இன்று யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 95 அகதிமுகாம்களில் வசிக்கும் 220 குடும்பங்களுக்கு 33 இலட்சம் ரூபா பெறுமதியான சமையல் உபகரணங்களை இவர் வழங்கவுள்ளார்.

இவருடன் இவ் உபகரணங்களை வழங்கும் ஜப்பான் கொம்பனியான நொறிரேக் லங்கா நிறுவனப் பிரதிப் பணிப்பாளர் சிமாஸ் சாக்கியும் யாழ்ப்பாணம் வரவுள்ளார். (க-3)

## உலகக் கிண்ணப் போட்டி

# மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று ஓட்டங்களால் வெற்றி

(ஹேப்டவுண்)

தென்னாபிரிக்காவின் ஹேப்டவுண் மைதானத்தில் நேற்று ஆரம்பமான உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது.

முதலில் ஆட்டம் மந்தமாக இருந்த போதிலும் பிரைன் லாராவின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

துடுப்பாட்டத்தில் 16 பந்துகளைச் சந்தித்த வெவல் ஹிண்ட்ஸ் எந்தவித ஓட்டமும் பெறாமல் ஆட்டமிழந்தார். கிரிஸ்கைல்ஸ் 21 பந்துகளைச் சந்தித்து 2ஓட்டங்களுடன் பொலக்கின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து ஹண்ட்ஸ் ஆட்டமிழந்தபோது களமிறங்கிய சந்ரபோல் 60 பந்துகளை சந்தித்து 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கலிஸின் பந்து வீச்சில் குளுஸ்னரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். கால்கூப்பர் சிறப்பாக விளையாடி 40 பந்துகளை எதிர்கொண்டு 40 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய பிரைன் லாரா அதிரடியாக விளையாடி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஓட்டங்களை துரித கதியில் உயர்த்தினார். அவர் 134 பந்துகளை எதிர் கொண்டு 116ஓட்டங்களை பெற்ற வேளை குளுஸ்னரின் பந்துவீச்சில் நித்தினியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு உதிரியாக 14 ஓட்டங்கள் கிடைத்தன பந்து வீச்சில் ஷொன்பொலக் 10 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 52 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

மைக் நித்தினி 10 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் குளுஸ்னர் 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றையும் கைப்பற்றினார்.

49 ஓவர்களில் 279 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது.

முதலில் களமிறங்கிய ஹேர்ஷல் கிப்ஸ் 28 பந்துகளைச் சந்தித்து 24 ஓட்டங்களை பெற்ற வேளை டிலானின் பந்து வீச்சில் ஜெக்கப்பிட் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இது டிலானின் 100வது விக்கெற்றாகும.

அடுத்து டிப்பென்னர் 25 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்ற போது கால்கூப்பரின் பந்து வீச்சில் ஜேக்கப்பினால் 'ஸ்ரெம்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். தென்னாபிரிக்காவின் 3வது விக்கெற்றாக ஜாக்கலிஸ் ஆட்டமிழந்தார் இவர் கொலின்ஸ் வீசிய பந்தில் ஜெக்கப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்துக் களமிறங்கிய ஜோன்டிறுட்ஸ் 6 பந்துகளை சந்தித்து 2 ஓட்டங்களைப் பெற்ற வேளை கூப்பர் வீசிய பந்து விக்கெற்றில்பட்டு ஆட்டமிழந்தார்.

விறுவிறுப்பாக வெற்றி இலக்கை நோக்கி சென்று கொண்டிருந்த போது லான்ஸ் குளுஸ்னர் ஆட்டமிழந்தார். 4பந்துகளில் எட்டு ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற நிலையிலிருந்த வேளை குளுஸ்னர் ஆட்டமிழந்தமை போட்டியின் போக்கையே மாற்றியது.

குளுஸ்னர் 48 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிசமைத்துக் கொண்டிருந்த வேளை கலிஸ் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து களமிறங்கிய நித்தினி ஒரு பந்தை எதிர் கொண்டு அதனை உயர்த்தி அடித்த போது ஆட்டமிழந்தார். இறுதியாக களமிறங்கிய அலன் டொனால்ட் இறுதிப் பந்தை எதிர் கொண்டு ஒரு பவுன்டரியை அடித்தார்.

இந் நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிரைன் லாரா தெரிவுசெய்யப்பட்டார்.

## கப்டன் பொதிகைத்தேவனின் இறுதி ஊர்வலம் இன்று

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கடலில் வீரகாவியமான கடற்புலி கப்டன் பொதிகைத தேவனின் திருவுருவப்படம் தாங்கிய இறுதி ஊர்வலம் இன்று நண்பகல் 12.30 மணியளவில் புலோலி தெற்கிலுள்ள அவரது வீட்டில் இருந்து ஆரம்பமாகின்றது.

ஊர்வலம் பிரதான வீதியூடாக நெல்லியடிச்சந்தியை பி.ப 1 மணியளவில் வநதடையும்.அங்கு வீரவணக்ககூட்டம் இடம்பெறும். பின்னர் அங்கிருந்து பருத்தித்துறையை பி.ப 2 மணியளவில் ஊர்வலம் வந்தடைந்து வீர வணக்க கூட்டம் இடம்பெறும்.

அங்கிருந்து மேஜர் ரஞ்சன் பூங்கா சந்தியூடாக நாவலடிச் சந்தியைச் ஊர்வலம் சென்றடையும். பின்னர் வியாபாரி மூலைச்சந்தி சுப்பர் மடம், சக்கோட்டை ஊடாக இன்பருட்டியை ஊர்வலம் சென்றடையும்அங்கும் அஞ்சலிகூட்டம் இடம்பெறும்.

பின்னர் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி சந்தியூடாக எல்லாலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சென்றடைந்து மாலை6 மணியளவில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படும்.(த)

### இலங்கையில்....

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கையின் ஒருமைப்பாட்டையும் இறைமையும் பாதுகாப்பது சம்பந்தமான விடயத்தில் இந்தியா தெளிவானதோர் நிலைப்பாட்டை கொண்டுள்ளதை இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பில் இருந்து அறிந்துள்ளேன்என்று கூறியதுடன்,இலங்கையில் தமிழீழம் ஏற்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பமாட் டாது என்றும் தெரிவித்தார். (வ)

### முப்படை..

உடனடியாக எடுக்கவில்லை. இதனால் விடுதலைப் புலிகளின் படகுகள் சுமார் 24 மணித்தியால ங்கள் வரை கடலில் தரித்து நிற்க வேண்டியேற்பட்டது. இதனையடுத்து விடுதலைப்புலிகள் படகை வெடிக்கவைத்ததுடன் விடுதலைப் பேராளிகள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.

ஜனாதிபதியின் உத்தரவை உ ட 6 நடைமுறைப்படுத்தியிருந் தால் இத்தகைய சம்பவம் ஏற்பட்டிருக்கமாட்டாது

இந் நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்த உத்தரவுகளை மேலும் பிறப்பித்திருந்தால் இத்துக்கரமான சம்பவம் நடைபெற்றிருக்க மாட்டாது என்றும் வருங் காலத்தில் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி முப்படை தளபதி என்ற முறையில் பாதுகாப்பு அமைச்சுக்கும் படையின் உயர் அதிகாரிகளுக் கும் ஜனாதிபதியே நேரிடையாக பணிப்புரைகளை விடுப்பார் என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம்பீரீஸ் தெரிவித்துள்ளார் (ம)

## ஆண்டு விழா

(மண்கும்பான்)

யாழ்.இந்துக்கல்லூரி சேவை கழகத்தின் 11வது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 10 மணிக்கு சேவைக்கழகத் தலைவர் றஜீவ் தலைமையில் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது (ந-55)

### முஸ்லிம்களின்....

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்பே உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

### தொழிலற்ற...

இளைஞர்கள் பயிற்றப்பட்டு பிரச்சினைகள் இன்றி தம்மால் தொழில் வாய்பை பெற்றுக் கொள்ளமுடியுமென்ற நம்பிக்கையையும் பெற்று விட்டால் அவர்கள் தமக்குஎன வேலைகளை தேடிக் கொள்வார் என்று கொள்கை அபிவிருத்தி அதிகாரிகள தெரிவித்தனர்.

8 வாரகாலம் உள்ளகப் பயிற்சிக் காலமாகும். இக்காலப் பகுதியில் ஆங்கிலமும், தகவல் தொழில் நுட்பமும் கற்றுக் கொடுக்கப்படும் பயிற்சி நான்கு முகாம்களில் நடைபெறும் ரண்தம்பே,ஹய்யன்துடுவ,எரமினியாய,எம்பிலுப்பிட்டிய ஆகிய இளைஞர் நிலையங்களில் நடாத்தப்பபடும். ஒரு அணியில் 200 ஆண்களும் 50 யுவதிகளும் பயிற்றப்படுவார்.

இளைஞர் சேவை அணியின் பணிப்பாளராக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த கேணல் சண்ணா குணதிலக பணியாற்றுவார். பயிற்சி ஆசிரியர்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இளைஞர் சேவையை மேற்பார்வையிடும் கவுன்சில் சரித்த ரத்வத்த தலைமையில் இயங்கும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அக் கவுன்சிலின் ஓர் உறுப்பினராக செயற்படுவார். (த)

### வவுனியாப்....

மூன்று போராளிகளுக்கும் அனுதாபம் தெரிவிக்கவே இக்கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை மீண்டும் சில குறிப்பிட்ட இடங்களில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட வவுனியாப் பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### மதில்....

திருந்த மதில் இடிந்து வீழ்ந்ததால் தலையில் படுகாயமடைந்த மாணவன் தொல்லிப்பழை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான்.சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியைப் பார்வையிடச் சென்ற மாணவனுக்கே இக்கதி நேர்ந்துள்ளது. (த-12)

## நெடுந்தீவுச் சம்பவம்

# கண்காணிப்புக்குழு வினரின் செயற்பாடு பக்கச்சார்பானது

### பொதுஅமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த 4ம் திகதி விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவர் படகை வெடிக்க வைத்து வீரச்சாவடைந்த சம்பவம் வேதனை மிக்கது. மேற்படி சம்பவத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கையாண்ட விதம் கண்டனத்திற்குரியது.

இவ்வாறு யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்ப்பாணம் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது மேலும் அக் கண்டன அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது.

நெடுந்தீவுக்கடற்பரப்பில் வைத்து கடந்த வியாழக்கிழமை கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட புலிகளின் றோலர் படகை வெள்ளிக்கிழமை நண்பகல் கடற்படையினர் தங்கள் பீரங்கிப் படகுகளில் இழுத்தச்செல்ல முற்பட்ட போது அதிலிருந்த மூவரும் படகை வெடிக்கச் செய்து உயிரை மாய்த்துக் கொண்ட சோக நிகழ்வானது கண்காணிப்புக்குழு யதார்த்தமாக, உண்மை நிலையை பார்க்கத்தவறிய காரணத்தினால் ஏற்பட்டதாகும். இவ்வாறான சம்பவங்கள் சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட செயலாக நாம் கருதி அதனை வன்மையாக கண்டிக் கின்றோம்.

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும், நலலெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக இதுவரை அமுல் செய்யப் படவில்லை.

காலத்துக்கு காலம் அரச, ஆயுத படைகளின் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும்,மனித உரிமை மீறல்களும் பற்றிய விடயங்களை அரசுக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் எடுத்துக்கூறிய போதும் அவை நடுநிலை நின்று விடயங்களை அணுகி நீதி வழங்கியதாக இல்லை.

வடக்கு கிழக்கில் அரசியல் பணிக்காகவும் பொருண்மிய மேம்பாட்டிற்காகவும் நிராயுத பாணிகளாக புலிப்போராளிகள் கடலிலும்,தரையிலும் நடமாடும் சுதந்திரம்,உரிமை உண்டு என போர்நிறுத்த உடன்பாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும கடற்படையினரும் மேற்படி சம்பவத்தை கையாண்ட விதம் மிகவும் வன்மையாக கண்டிக் கப்பட வேண்டியது. நடுநிலை நின்று உண்மையின் தரிசனத்தை உலகிற்கு கூறவேண்டிய சர்வதேச இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப புக்குழுவினர் புலிகளின் றோலர் படகு ஆயுதக்கடததலில் ஈடுபட்டது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி ஜனாதிபதி முதல் சிங்களப்பேரினவாதிகளுக்கும், ஊடகங்களுக்கும் நல்ல தீனியாக்கியுள்ளன. உண்மையில் அது வேதனைக்குரியது.

சமாதானத்தை விரும்பும் தமிழ்மக்களுக்கு இச்சம்பவம் பேர்அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. சமாதான முயற்சியின் எதிர்காலம் சர்வதேசத்தினதும் ,சிங்கள தேசத்தினதும் கைகளில் தான் தங்கியுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை மேற்படி சம்பவத்தை யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழு கையாண்ட விதம் குறித்து வலிகாமம கோட்ட பொதுஅமைப்புக்கள் ஒன்றியம் தனது கண்டனத்தை தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (த-12)


## பாராட்டுதல்

புதிய செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு. கணபதிப்பிள்ளை கனேசபிள்ளை கணக்காளர் (போக்குவரத்துப்பகுதி) ஆகிய நான் நீரிழிவு நோயால் 13 வருடங்கள் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற போது 2002ம் ஆண்டு தைமாதம் இன்சுலீன் சிகிச்சை அளிக்கப்பட்டு. இன்சுலீனை உபயோகிக்கும் படி ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இந் நிலையில் ஆயுள்வேத வைத்திய கலாநிதி க.வே.துரைராசா அகஸ்தியர் வைத்தியசாலை குளப்பிட்டி சந்தி சந்தை முன்பாக காங்கேசன் துறை வீதி கொக்குவில் என்பவரிடம் 03.02.2002முதல் 19.06.2002 வரை தமிழ் வைத்திய முறைப்படி சிகிச்சை பெற்று இன்று வரை எந்த மருந்தும் பாவிக்காமல் பு,ரண குணமடைந்துள்ளேன்.எமது பிணியை நீக்க சிகிச்சை அளித்தமைக்காக வைத்திய கலாநிதி க.வே. துரைராசா அவர்களின் வைத்திய சேவையை பாராட்டுவதோடு என்போன்ற நோயாளிகளும் அவரிடம் சிகிச்சை பெற்று குணமடைவீர்கள் என நம்புகின்றேன்

க. கணேசபிள்ளை

(6531)

THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1-O/L வரை (வறிய குடும்ப மாணவர்களுக்கு விசேட சலுகைகள்)

தொடர்பு:

தலைமை ஆசிரியர்
விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302)கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (6532)

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

V.S.P லஞ் ஓயில்

தயாரிப்பாளர்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 10.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.